بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ    نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ    وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian Tamil

தொகுதி 11

இதழ் 13 - 14

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரீ 1447 - ஷவ்வால் 06 - 13

ஹிஜ்ரீ ஷம்ஸி 1405 - அமான் 26 ஷஹாதத் 02★ 26 மார்ச் - 02 ஏப்ரல் 2026


## அல்லாஹ்வின் கட்டளை

اِنَّاۤ اَنۡزَلۡنٰهُ فِىۡ لَيۡلَةِ الۡقَدۡرِ ۚ ۝ وَمَاۤ اَدۡرٰٮكَ مَا لَيۡلَةُ الۡقَدۡرِ ؕ ۝
لَيۡلَةُ الۡقَدۡرِ ۙ خَيۡرٌ مِّنۡ اَلۡفِ شَهۡرٍ ؕ ۝ تَنَزَّلُ الۡمَلٰٓـئِكَةُ
وَالرُّوۡحُ فِيۡهَا بِاِذۡنِ رَبِّهِمۡ ۚ مِنۡ كُلِّ اَمۡرٍ ۛ ۝
سَلٰمٌ ۛ هِىَ حَتّٰى مَطۡلَعِ الۡفَجۡرِ ۝

நிச்சயமாக நாம் இ(ந்)த(க்குர்ஆ)னை தீர்ப்பிற்குரிய இரவில் இறக்கினோம். தீர்ப்பிற்குரிய இரவு என்றால் என்னவென்று உமக்கு அறிவித்தது எது? தீர்ப்பிற்குரிய இரவு, ஆயிரம் மாதங்களை விட மிகச் சிறந்ததாகும். அதில் வானவர்களும் அந்த ஆன்மாவும் அனைத்து விவகாரங்கள் தொடர்பாகத் தங்கள் இறைவனின் கட்டளையுடன் இறங்கினர். விடியற்காலை தோன்றும் வரை சாந்தியானதாகவே இருக்கும். (97: 2 - 6)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**நபிமொழி**

## தந்தையின் நண்பர்களுடன் அழகிய முறையில் நடந்து கொள்ளுதல்

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மனிதனின் சிறந்த நன்மை என்னவென்றால், அவன் தனது தந்தை மரணித்து விட்ட நிலையிலோ அல்லது அவர் வேறு இடத்திற்கு சென்று விட்ட நிலையிலோ அவரது நண்பர்களுடன் அழகிய முறையில் நடந்து கொள்வதாகும். (முஸ்லிம் ஹதீஸ்) * * * * * * * * * * *

**வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பொன்மொழிகள்**

## ரமலான் மாதம் உள்ளம் ஒளிமயமாகுவதற்கு மிகச் சிறந்த மாதமாகும் என்று ஸூஃபிமார்க்கள் எழுதியுள்ளனர்

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: شَهۡرُ رَمَضَانَ الَّذِىۡٓ اُنۡزِلَ فِيۡهِ الۡقُرۡاٰنُ என்ற வசனத்திலிருந்து ரமலான் மாதத்தின் மகத்துவம் தெரிய வருகின்றது. இந்த மாதம் உள்ளம் ஒளிமயமாகுவதற்கு மிகச் சிறந்த மாதமாகும் என்று ஸூஃபிமார்கள் எழுதியுள்ளனர். இதில் அதிகப்படியான இறை தரிசனங்கள் ஏற்படுகின்றன. தொழுகை ஆன்மாவைத் தூய்மைப்படுத்துகிறது, நோன்பு உள்ளத்தைப் ஒளிமயமாக்குகின்றது. நோய்களும், உலக நோக்கங்களும் மனிதனை இந்த அருட்கொடையிலிருந்து இழப்பிற்குரியவனாக ஆக்குகின்றன. எனது இளமைக் காலத்தில் ஒருமுறை நான் கனவில் கண்டது எனக்கு நினைவிருக்கிறது: நோன்பு நோற்பது அஹ்லே பைத்தின் சுன்னத்தாகும். என்னைப் பற்றிப் பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: ‘ஸல்மான் நம்மவர், அஹ்லே பைத்தைச் சார்ந்தவர் ஆவார். அதாவது, அஸ்ஸுல்ஹான் - அந்த நபரின் கைகளால் இரு தரப்பினரிடையே சமாதானம் ஏற்படும். ஒன்று, வெளிப்புறமானது; மற்றொன்று உட்புறமானது. மேலும், இந்தச் செயல் வாளினால் அல்ல, மாறாக மென்மையுடன் நடக்கும். நான் ஹுஸைனி வழியில் இல்லை, மாறாக ஹஸனி (சமாதானம் சார்ந்த) வழியில் இருக்கிறேன் - அதாவது போர் செய்யாதவர். எனவே, இது நோன்பை நோக்கிய ஒரு சமிக்ஞை என்று நான் புரிந்து கொண்டேன். ஆகவே, நான் ஆறு மாதங்கள் வரை தொடர்ந்து நோன்பு வைத்தேன். இடைப்பட்ட காலத்தில் நான் கண்ட காட்சி: ஒளியால் ஆன தூண்கள் வானத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தன. இந்த ஒளியின் தூண்கள் பூமியிலிருந்து வானத்திற்குச் சென்றனவா? அல்லது எனது உள்ளத்திலிருந்து சென்றனவா? என்பது சந்தேகத்திற்குரியது. ஆனால், இவை அனைத்தும் எனது இளமைக் காலத்தில் நிகழ்ந்தவையாகும். நான் நினைத்திருந்தால், அப்போது நான்கு ஆண்டுகள் வரை கூடத் தொடர்ந்து என்னால் நோன்பு நோற்றிருக்க முடியும். இளமையின் உற்சாகம் முப்பது வயது வரை இருக்கும். நாற்பது வரும்போது இறக்கைகள் உதிரத் தொடங்கும்.

தற்போது நாற்பது ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில், அந்த நிலைமை இப்போது இல்லை. இல்லையெனில், முன்பு நான் பலமுறை பட்டாலாவிற்கு (Batala) நடந்தே சென்றிருக்கின்றேன், அப்போது எனக்கு எந்தச் சோர்வோ, பலவீனமோ ஏற்பட்டதில்லை. ஆனால், இப்போதோ ஐந்து அல்லது ஆறு மைல் நடந்தாலே சிரமமாக இருக்கிறது. நாற்பது வயதிற்குப் பிறகு இயற்கையான உடல் வெப்பம் குறையத் தொடங்குகிறது, இரத்தம் குறைவாக உற்பத்தியாகிறது, மேலும் மனிதன் மீது பல கவலைகளும், துக்கங்களும் வந்து சேருகின்றன. இப்போது பலமுறை பார்த்திருக்கிறேன், பசியை போக்க உணவு உண்பதில் சிறிது தாமதமானால் கூட உடல்நிலையில் பாதிப்பு ஏற்பட்டு விடுகிறது. (மல்பூஸாத், பாகம் 2, பக்கம் 561, காதியான் பதிப்பு 2003)

* * * * * * * * * * *

**தஃப்ஸீரே கபீரிலிருந்து**

## ஒவ்வொரு நபரின் செல்வத்திலும் உறவினர்கள், ஏழைகள் மற்றும் பயணிகளுக்கு உரிமை உள்ளது

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் சூரா பனீ இஸ்ராயீல் வசனம் 27-ன் விளக்கவுரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஒவ்வொரு நபரின் செல்வத்திலும் உறவினர்கள், ஏழைகள் மற்றும் பயணிகளுக்கு உரிமை உள்ளது. உறவினர்கள் மனிதனின் வருமானத்தில் பல வகையில் உதவி செய்கின்றனர். எனவே மனிதனின் செல்வத்தில் அவர்கள் அனைவருக்கும் உரிமை உள்ளது. உதாரணமாக, பெற்றோர் ஒரு மகனைப் படிக்க வைத்து, அவர் உயர்ந்த பதவியை அடைந்து, மற்ற சகோதரர்கள் கல்வியறிவு இல்லாமல் போனால், அந்த அதிகாரியின் செல்வத்தில் மற்ற சகோதரர்களுக்கும் உரிமை உள்ளது. ஏனெனில் எந்தப் பணத்தைக் கொண்டு அவருக்குக் கல்வி வழங்கப்பட்டதோ, அதில் அவர்கள் அனைவருக்கும் பங்கு இருந்தது.

ஏழைகள் மற்றும் வழிப்போக்கர்களின் உரிமையை அல்லாஹ் மற்றோர் இடத்திலும் தெளிவுபடுத்தியுள்ளான்: ‘அவர்களுடைய செல்வங்களில் கேட்பவருக்கும், ஆதரவற்றவர்களுக்கும் பங்கு உண்டு. (அஸ்ஸாரியாத்: 20) மனிதனின் செல்வத்தில் யாசிப்பவர் போன்ற நபர்களுக்கும் உரிமை உள்ளது. ஏழைகளுக்கு உரிமை வழங்கப்படுவதற்கு ஒரு காரணம் என்னவென்றால், உலகில் செல்வந்தர்களும், ஏழைகளும் மாறிக்கொண்டே இருக்கிறார்கள். இன்று ஏழையாக இருப்பவர்கள் ஒரு காலத்தில் செல்வந்தர்களாக இருந்திருக்கலாம், மேலும் இன்று செல்வந்தர்களாக இருப்பவர்கள் ஒருகாலத்தில் ஏழைகளாக இருந்திருப்பர். மேலும் அக்காலத்தின் செல்வந்தார்கள் அவர்களுடன் நல்ல முறையில் நடந்திருப்பர். எனவே, ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், ஒரு மனிதனின் செல்வம் அவனுக்கு மட்டுமே சொந்தமானது அல்ல, மாறாக, அதில் மற்றவர்களின் உரிமைகளும் அடங்கியுள்ளன. அதன் இரண்டாவது காரணம் என்னவென்றால், அல்லாஹ் அனைத்துப் பொருட்களையும் முழு மனித சமுதாயத்திற்காகவே படைத்தான், ஸைது மற்றும் பக்ர் போன்ற ஒரு சில தனி நபருக்காக மட்டும் அல்ல.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 4, பக்கம் 323 - 324, காதியான் பதிப்பு 2010-ம் ஆண்டு) * * * * * * * * * * *


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

لَا اِلٰہَ اِلَّا اللّٰہُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰہِ

## குழந்தைகள் வளர்ப்பும் ரமலானும் மற்றும் தக்வாவின் அடிப்படையான நடைமுறையும்

மனித வாழ்க்கை அதன் உண்மைத்துவத்தின் அடிப்படையில் மிகக் குறுகியதும், தற்காலிகமானதும் ஆகும். كُلُّ نَفْسٍ ذَآئِقَةُ الْمَوْتِ என்று திருக்குர்ஆன் இந்த உண்மையை மிக விரிவான வடிவில் எடுத்துரைக்கின்றது. பொருள்: 'ஒவ்வோர் ஆன்மாவும் மரணத்தைச் சுவைத்தே தீரும்' (ஆலி இம்ரான்: 186). இவ்வுலக வாழ்க்கை ஒரு நீர்க் குமிழியாகும் என்ற உண்மையின் பக்கம் இந்த வசனம் நமக்கு கவனமூட்டுகிறது. எவரும் இங்கு நிரந்தரமாக வாழ வரவில்லை; ஒரு நாள் ஒவ்வொருவரும் தனது உண்மையான படைப்பாளனின் முன்னிலையில் ஆஜராக வேண்டும். இந்த அடிப்படை சிந்தனையைக் கொண்டே ஒரு முஸ்லிம் தனது வாழ்க்கையின் ஒவ்வொரு செயலையும் அர்த்தமுள்ளதாக்க முயன்றவாறு, தமது மறுமைக்காகத் தம்மைத் தயார்படுத்திக் கொள்கிறார். மேலும் தமது அடுத்த தலைமுறையினரைப் பற்றியும் கவலைப்படுகிறார்.

தனது குழந்தைகளை மார்க்கம் மற்றும் உலகம் ஆகிய இரண்டிலும் வெற்றிகரமான நபர்களாக மாற்ற முயற்சிக்கும் ஆர்வத்தை அல்லாஹ் மனித இயல்பில் வைத்துள்ளான். இதனால்தான் ஒவ்வொரு நபரும் தனது சக்திக்கும், அறிவுக்கும் ஏற்ப தனது சந்ததியினருக்குப் பயிற்சி அளிக்கிறார். ஓர் அறிஞர் தனது பிள்ளைக்குக் கல்வியைக் கற்பிக்கிறார்; ஒரு வியாபாரி வியாபாரக் கொள்கைகளைக் கற்றுக் கொடுக்கிறார்; ஒரு மருத்துவர் அல்லது ஹக்கீம் தனது திறமையையும், அனுபவத்தையும் தமது பிள்ளைகளிடம் மாற்ற முயற்சிக்கின்றார். இதற்கெல்லாம் ஒரு காரணம், தனது பிள்ளைகள் அவர் உருவாக்கிய வணிகத்தையோ, பெயரையோ தக்க வைத்துக்கொள்வது மட்டுமல்லாமல், அதை மேலும் வளர்க்க வேண்டும் என்பதே ஆகும்.

ஆனால், ஒரு முஸ்லிமிற்கு இதையும் விடப் பெரிய பொறுப்பு ஒன்று உள்ளது; அது தனது குழந்தைகளுக்கு மார்க்கக் கல்வியை வழங்குவது, அவர்களிடத்தில் அல்லாஹ்வின் அன்பை உருவாக்குவது மற்றும் தக்வா (இறையச்சம்) எனும் ஆன்மாவை விழிப்படையச் செய்வது. இதுதான் அவருக்குப் பின்னாலும் அவருக்கு 'ஸதக்கத்துல் ஜாரியா' (நிலையான தருமம்) ஆகவும், அவரது நிரந்தர வெற்றிக்கான வழியாகவும் அமையும்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மனிதன் இறந்த பிறகு, ஒரு சில விஷயங்களைத் தவிர, அவனது மற்ற அனைத்து செயல்களும் முடிந்து விடுகின்றன. அவற்றில் ஒன்று, அவனது பிள்ளைகளிடத்தில் தொடரும் நன்மைகள் ஆகும். இதிலிருந்து, குழந்தைகளின் சரியான வளர்ப்பு என்பது உலக ரீதியில் மட்டும் பயனளிக்காது மாறாக, மறுமையிலும் மனிதனுக்கு கருணைக்கு காரணியாக அமைகிறது என்பது தெளிவாகிறது.

அருளுக்குரிய ரமலான் இந்தப் பயிற்சிக்கு மிகவும் பொருத்தமான மற்றும் அருளுக்குரிய மாதமாகும். ஒரு முஸ்லிம் சுயமாகவே இறைவணக்கம், நோன்பு, தொழுகை மற்றும் திருக்குர்ஆன் ஓதுவதில் ஈடுபடும் காலமாகும் இது. தனது குழந்தைகளும் இந்த நற்செயல்களில் பங்குபெற வேண்டும் என்று அவனது உள்ளம் விரும்புகிறது. இத்தகைய சூழலில், குழந்தைகளின் உள்ளங்களிலும் இறை வணக்கத்தின் மீது ஆர்வம் தோன்றுகிறது, மேலும் அவர்கள் தங்கள் பெற்றோரைப் பின்பற்றி நோன்பு நோற்கவும், தொழுவதற்கும் விருப்பம் கொள்கிறார்கள்.

எவ்வாறாயினும், எந்த வயதிலிருந்து குழந்தைகளுக்கு நோன்பு நோற்கும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும்? சிறிய குழந்தைகளையும் நோன்பு நோற்கும்படி கட்டாயப்படுத்த வேண்டுமா? அல்லது படிப்படியான முறையைப் பின்பற்ற வேண்டுமா? என்பது இங்கே எழும் ஒரு முக்கியமான கேள்வியாகும். இதில் சில மக்கள் வரம்பு மீறுவதைக் காண முடிகிறது; சிலர் மிகச் சிறிய குழந்தைகளைக் கூடக் கட்டாயப்படுத்தி நோன்பு நோற்க வைக்கின்றனர், இன்னும் சிலர் தங்கள் பருவமடைந்த குழந்தைகளுக்கும் நோன்பு நோற்குமாறு அறிவுறுத்துவதில்லை.

அறிவுரையும், பயிற்சியும் தொடர்ச்சியாக இருக்க வேண்டும் என்ற ஒரு பொதுவான விதியை திருக்குர்ஆன் நமக்கு கற்பிக்கின்றது. திருக்குர்ஆன் கூறுகின்றது: وَذَكِّرْ فَإِنَّ الذِّكْرٰى تَنْفَعُ الْمُؤْمِنِيْن

எனவே அறிவுரை செய்து கொண்டிருங்கள். ஏனெனில் நிச்சயமாக அறிவுரை நம்பிக்கையாளர்களுக்கு பயனளிக்கின்றது. (அஸ்ஸாரியாத்: 55).

இதே போதனையின் வெளிச்சத்தில், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் குழந்தைகளின் நோன்பு குறித்து மிகவும் ஞானமான முறையில் வழிகாட்டல் வழங்கியுள்ளார்கள். அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

சிலர் மிகச் சிறிய குழந்தைகளையும் நோன்பு நோற்க வைக்கின்றனர். உண்மையில் ஒவ்வொரு கடமைக்கும், சட்டத்திற்கும் தனித்தனி எல்லையும், வெவ்வேறு நேரமும் இருக்கின்றது. என்னைப் பொறுத்தவரை, சில கட்டளைகளின் காலம் நான்கு வயதிலிருந்தே தொடங்கிவிடுகிறது, சில ஏழு முதல் பன்னிரண்டு வயது வரையிலும், சில பதினைந்து அல்லது பதினெட்டு வயதிலிருந்தே தொடங்குகின்றன. என்னைப் பொறுத்தவரை, நோன்பு நோற்கும் கட்டளை பதினைந்து முதல் பதினெட்டு வயது வரையிலான குழந்தைகளுக்குத்தான் பொருந்தும், இதுவே பருவமடையும் வயதாகும்.

என்னைப் பொறுத்தவரை, இந்த வயதுக்கு முன்பே குழந்தைகளை நோன்பு நோற்க வைப்பது அவர்களின் ஆரோக்கியத்தில் மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்துகிறது. ஏனெனில், அந்த வயது அவர்கள் சக்தியையும் வலிமையையும் பெற வேண்டிய பருவமாகும். அவர்கள் சக்தியைச் சேமிக்கும் போது, அந்த சக்தியை உருவாக்க விடாமல் தடுப்பதும், வளர விடாமல் செய்வதும் அவர்களுக்கு கடும் தீங்கு விளைவிக்கக் கூடியதாகும்.

பாருங்கள்! ஒரு ஆயில் இன்ஜின் அல்லது பிற இன்ஜின்களில் அதிகப்படியான நீராவி (Steam) எப்போதும் விடப்படுவதில்லை. நீராவி இன்ஜினில் போதுமான அளவு தயாராகாத வரை அது வெளியேற்றப்படுவதில்லை. ஒரு நதியை மறித்து அதன் திசையை கால்வாய் பக்கம் திருப்ப வேண்டுமானால், நதியில் அதிக தண்ணீர் இருக்கும்போது மட்டுமே அவ்வாறு செய்யப்படுகிறது. ஆனால், நதியில் போதுமான தண்ணீர் இல்லையென்றால், அதிலிருந்து தண்ணீர் எடுக்கப்படுவதில்லை. எனவே, குழந்தை உடல் வலிமையைப் பெறும் காலத்தில் அதனை நோன்பு நோற்க வைக்கக் கூடாது. அவர்களின் வயது பதினைந்து ஆகும் வரை. ஏனெனில் அதற்கு முன் குழந்தையின் மீது நோன்பு நோற்பது கடமையல்ல. ஆக, இந்த வயதில் குழந்தைகளை நோன்பு நோற்க விடாதீர்கள். இன்னும் கூறப்போனால், அவர்கள் தானாக முன்வந்து நோன்பு நோற்க ஆசைப்பட்டாலும் அவர்களைத் தடுக்க முயற்சிக்க வேண்டும்.'

ஹுஸூர் (ரலி) அவர்கள் மேலும் கூறுகின்றார்கள்:

பன்னிரண்டு வயதுக்குக் குறைவான குழந்தையை நோன்பு நோற்க வைப்பது என்னைப் பொறுத்தவரை ஒரு குற்றமாகும். பன்னிரண்டு முதல் பதினைந்து வயது வரையிலான குழந்தையை யாராவது நோன்பு நோற்க வைத்தால், அவர் தவறு செய்கிறார். பதினைந்து வயதிலிருந்து நோன்பு நோற்கும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும், பதினெட்டு வயதில் நோன்பு கடமையாகக் கருதப்பட வேண்டும்... இவ்வாறு படிப்படியாக அந்த நேரத்தில் அவர்களை நோன்பிற்குப் பழக்கப்படுத்த வேண்டும்.'

(குத்பாத்தே-மஹ்மூத், தொகுதி 9, பக்கங்கள் 88-89, வெள்ளிக்கிழமை உரை, 13 ஏப்ரல் 1925)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் இந்த வழிகாட்டல் இறை வணக்கங்களிலும் சமநிலை, நுட்பம் மற்றும் படிப்படியான மாற்றம் ஆகியவற்றையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்ற இஸ்லாத்தின் போதனையை தெளிவுபடுத்துகின்றது. இஸ்லாம் தேவையற்ற கடுமையை காட்டும்படி போதிக்கவுமில்லை ; அதேபோன்று கவனமின்மையை அனுமதிப்பதும் இல்லை. மாறாக ஒவ்வொரு விஷயத்தையும் அதற்கு பொருத்தமான நேரத்திலும், பொருத்தமான சூழ்நிலைக்கு ஏற்பவும் செய்யும்படி வழிகாட்டுகின்றது.

இதேபோன்று, திருக்குர்ஆன் நோய்வாய்ப்பட்ட விவகாரத்தில் தெளிவான சலுகைகளை வழங்குகிறது. ஆனால், அதே நேரத்தில் மனிதனின் இயல்பான பலவீனம் மற்றும் சாக்குப்போக்கு தேடும் சுபாவத்தையும் சுட்டிக்காட்டுகிறது:

إِنَّ الْإِنْسَانَ خُلِقَ هَلُوعًا

நிச்சயமாக மனிதன் பொறுமையற்றவனாகவும் பலவீனமானவனாகவும் படைக்கப்பட்டுள்ளான்' (அல்-மஆரிஜ்: 20).

அதாவது மனிதன் நிச்சயமாக அவசரப்படுபவனாகவும், பலவீனமாகவும் படைக்கப்பட்டுள்ளான்.

* * * * *   * * * * * *

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மேற்கொண்ட இறை வணக்கங்களைக் குறித்த ஈமானை வலுவூட்டும் நற்குறிப்புகள்**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரியின்படி வழிநடக்கக் கூடிய காட்சிகள் எல்லாரையும் விட அதிகமாக நமக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களிடம் தென்படுகின்றன

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்குத் திருக்குர்ஆன் மற்றும் ரஸூல் (ஸல்) அவர்களின் சுன்னத்தின் மீது நேசம் இருந்தது. அன்னாருடைய இறைவணக்கங்கள் ஒருபோதும் திருக்குர்ஆன் மற்றும் சுன்னத்தின் வரம்புகளைத் தாண்டிச் சென்றதில்லை. ஐவேளைத் தொழுகைகளைத் தவிர தஹஜ்ஜுத் தொழுகையை மிகவும் முறையாகப் பேணி வந்தார்கள். இஷ்ராக் தொழுகையையும் தொழுவார்கள்; ஆனால் தஹஜ்ஜுத் தொழுகையின் மீது அதிக அன்பு கொண்டிருந்தார்கள். தொழுகையில் அல்லாஹ்வின் மீது அன்னாருடைய கவனமும் ஈடுபாடும் எந்த அளவிற்கு இருக்குமென்றால், அன்னார் இவ்வுலகிலேயே இல்லாதது போன்ற ஒரு நிலை ஏற்படும்

ஹஸ்ரத் ஸாஹிப் அவர்கள் 14, 15 வயதிலேயே நாள் முழுவதும் திருக்குர்ஆனை ஓதிக் கொண்டிருப்பார்கள்; மேலும் அதன் ஓரங்களில் குறிப்புகளை எழுதிக் கொண்டே இருப்பார்கள்

ஹஸ்ரத் ஸாஹிப் அவர்கள் தொழுத அந்த முறையை நான் அறிவேன். ஒவ்வொரு தொழுகையையும் அதன் நேரத்தில் தொழுவார்கள்; மிகுந்த பணிவுடனும் அழுது மன்றாடியும் நிறைவேற்றுவார்கள். ஒரு குழந்தை தனது பெற்றோரிடம் அழுது ஏதேனும் கேட்பது போல அன்னாருடைய தொழுகை இருக்கும். அத்தகைய தொழுகை பின்னால் நின்று தொழுது கொண்டிருக்கும் எங்களது உள்ளங்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இதுவே நாங்கள் கற்ற முதல் பாடமாகும் (மவ்லவி அப்துல் கரீம் ஸாஹிப் (ரலி) அவர்கள்)

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 13 பிப்ரவரி 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1405 ஆண்டு **தப்லீஃக் மாதம் 13 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝

صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியை இந்த காலத்தில் மிக அதிகமாக பின்பற்றிய காட்சிகளை அன்னாரின் உண்மை ஊழியராகிய ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தி அவர்களிடம் நாம் காண்கிறோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இறைவணக்கம் தொடர்பாக அன்னார் தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு வழங்கிய அறிவுரைகள், இறைவணக்கம் புரியும் முறைகள் மற்றும் இறை தியானம் செய்யும் முறைகளை கற்றுக்கொடுத்த நிகழ்வுகள் கடந்த குத்பாக்களில் எடுத்துரைக்கப்பட்டன. இன்று நான், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தமது எஜமானராகிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றி நடந்த எந்த நிகழ்வுகள் நம்மை வந்தடைந்துள்ளனவோ அவற்றை எடுத்துரைப்பேன்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் அவர்கள் அறிவிக்கிறார்கள்:

லங்கர்வால் குர்தாஸ்பூரைச் சேர்ந்த மிர்ஸா முஹம்மது தீன் ஸாஹிப் அவர்கள் எழுதி அனுப்பியுள்ளதாவது;

நான் சிறுவயது முதலே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களைப் பார்த்து வருகிறேன். முதன்முதலில் அன்னாரை ஹஸ்ரத் மிர்ஸா குலாம் முர்தஸா ஸாஹிப் அவர்களின் வாழ்நாளில் நான் பார்த்தேன். அப்போது நான் சிறுவனாக இருந்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வழக்கம் என்னவென்றால், இரவு இஷா தொழுகைக்குப் பிறகு விரைவில் உறங்கி விடுவார்கள். பிறகு நள்ளிரவு சுமார் ஒரு மணி அளவில் தஹஜ்ஜுத் தொழுகைக்காக எழுந்துவிடுவார்கள். தஹஜ்ஜுத் தொழுத பிறகு திருக்குர்ஆன் ஓதிக்கொண்டிருப்பார்கள். பின்னர் ஸுப்ஹு பாங்கு சொல்லப்பட்டதும், வீட்டில் சுன்னத் தொழுகையை முடித்துவிட்டுத் தொழுகைக்காக பள்ளிவாசலுக்குச் செல்வார்கள். அங்கே ஜமாஅத்துடன் தொழுவார்கள். சில நேரங்களில் அன்னாரே தொழுகை நடத்துவார்கள்; சில நேரங்களில் பள்ளிவாசலின் இமாம் மியா(ன்) ஜான் முஹம்மது ஸாஹிப் அவர்கள் தொழுகை நடத்துவார்கள். தொழுகை முடிந்து வந்ததும் சிறிது நேரம் உறங்குவார்கள். நான் அன்னாரை பள்ளிவாசலில் சுன்னத் தொழுகை தொழுவதை பார்த்ததில்லை. அன்னார் (அலை) சுன்னத்துகளை வீட்டிலேயே தொழுவார்கள்.(ஸீரத்துல் மஹ்தி, தொகுதி 1, பாகம் 3, பக்கம் 513 - 514, அறிவிப்பு எண்: 491)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தனது இறைவணக்கம் குறித்து எடுத்துரைக்கும்போது, அல்லாஹ் தமக்கு இறை வணக்கம் செய்வதற்கான ஆற்றலை எவ்வாறு வழங்கினான் என்பதைக் குறிப்பிட்டார்கள். ஆனால், இது அனைவருக்கும் உரியதல்ல என்றும் கூறினார்கள். ஒவ்வொருவரும் தமது சக்திக்கு மீறி இவ்வாறு செய்ய முயலக்கூடாது. ஏனெனில் தமக்கு அல்லாஹ் ஒரு சிறப்பான ஆற்றலை வழங்கியுள்ளதாக அன்னார் (அலை) கூறினார்கள்.

எவ்வாறிருப்பினும், தமது ஆன்மிக நிலையை அன்னார் (அலை) இவ்வாறு படம் பிடித்துக் காட்டுகின்றார்கள்:

நான் ஒருபோதும் கடினமான உடல் வருத்தங்களையோ, தற்கால சூஃபிக்களைப் போல ஆன்மாவிற்குத் துன்பம் தரும் கடும் முயற்சிகளையோ மேற்கொண்டதில்லை. தனிமையில் அமர்ந்து நாற்பது நாள் தவமும் இருந்ததில்லை. இறைவேதத்தால் ஆட்சேபிக்கப்படக்கூடிய, சுன்னத்திற்கு மாறான துறவறச் செயல்கள் எதையும் நான் செய்ததில்லை. மாறாக, பல்வேறு வகையான பித்அத்துகளில் மூழ்கிக் கிடக்கும் இத்தகைய ஃபக்கீர்கள் மற்றும் பித்அத்களைப் பின்பற்றுபவர்கள் மீது நான் எப்போதும் வெறுப்புக் கொண்டவனாகவே இருந்தேன்' என்று கூறினார்கள்.

பிறகு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: ஆம்! எனது தந்தையின் இறுதிக்காலம் நெருங்கியிருந்தபோது, ஒருமுறை தூய்மையான தோற்றமுடைய வயோதிக சான்றோர் ஒருவர் எனது கனவில் தோன்றினார். 'விண்ணுலக ஒளிகளை வரவேற்பதற்காகச் சில நோன்புகளை நோற்பது நபித்துவக் குடும்பத்தின் சுன்னத்தாகும்' என்று அவர் குறிப்பிட்டார்.

அதாவது அல்லாஹ்வின் வானத்து ஒளியை வரவேற்பதற்கு நோன்பு நோற்பது நபித்துவக் குடும்ப வழிமுறையாகும் என்று கூறினார்.

அல்லாஹ் அன்னாருக்கு இந்த அந்தஸ்தை வழங்கப்போகிறான் என்பதை அவன் கனவின் மூலம் சுட்டிக் காட்டியிருந்தான்.

எவ்வாறிருப்பினும், அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

நபித்துவ குடும்பத்தைச் சார்ந்தவர்களின் இந்த சுன்னத்தை நான் நிறைவேற்ற வேண்டும் என்று அவர் சுட்டிக் காட்டினார்.

எனவே, சில காலம் நோன்பு நோற்பதை நான் பொருத்தமெனக் கருதினேன். அதேவேளையில், இச்செயலை மறைமுகமாகச் செய்வது சிறந்தது என எண்ணி ஒரு வழியைக் கையாண்டேன். வீட்டிலிருந்து எனது உணவை ஆண்களுக்கான (வெளி) அறைக்கு வரவழைப்பேன். அந்த உணவை, நான் ஏற்கனவே வரச் சொல்லியிருந்த சில அநாதைக் குழந்தைகளுக்கு யாருக்கும் தெரியாமல் கொடுத்து விடுவேன். இவ்வாறு பகல் முழுவதும் நோன்புடன் இருப்பேன். இந்த நோன்புகள் குறித்து அல்லாஹ்வைத் தவிர வேறு எவருக்கும் தெரியாது. இரண்டு மூன்று வாரங்களுக்குப் பிறகு, நான் ஒரு வேளை வயிறு நிறைய உண்பதால் எனக்கு எவ்விதச் சிரமமும் ஏற்படுவதில்லை என்பதை உணர்ந்தேன். எனவே உணவின் அளவைக் குறைக்க எண்ணினேன். அன்று முதல் உணவைக் குறைத்துக் கொண்டே வந்தேன். இறுதியாக, பகல் இரவு முழுவதற்கும் ஒரேயொரு ரொட்டி மட்டுமே எனக்கு உணவானது. பிறகு அதையும் குறைத்து, 24 மணி நேரத்திற்குச் சில ரொட்டித் துண்டுகள் மட்டுமே எனது உணவாக இருந்தது.

அதாவது, 24 மணி நேரத்தில் சிறிதளவு ரொட்டி மட்டுமே உண்டார்கள்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: சுமார் எட்டு அல்லது ஒன்பது மாதங்கள் நான் இவ்வாறே செய்தேன். இரண்டு மூன்று மாதக் குழந்தைக் கூடத் தாங்கிக் கொள்ள முடியாத இத்தகையக் குறைந்த உணவிலும், அல்லாஹ் என்னை எல்லாவிதமான நோய்களிலிருந்தும் இன்னல்களிலிருந்தும் பாதுகாத்தான். அந்தக் காலத்தில் நான் கண்ட நோன்பின் அற்புதங்களில் மிக முக்கியமானது. எனக்குக் கிடைத்த அந்த நுட்பமான ஆன்மிகக் காட்சிகளாகும். முந்தைய சில நபிமார்களுடனும், இந்த உம்மத்தில் வாழ்ந்து சென்ற உயரிய அந்தஸ்து கொண்ட இறை நேசர்களுடனும் எனக்குச் சந்திப்புகள் நிகழ்ந்தன. ஒருமுறை முழு விழிப்பு நிலையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும், ஹஸ்ரத் ஹஸன், ஹுஸைன், ஹஸ்ரத் அலீ (ரலி) மற்றும் ஹஸ்ரத் பாத்திமா (ரலி) ஆகியோரையும் கண்டேன். அது கனவல்ல; விழிப்பு நிலையின் ஒரு வகையாகும்.

நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

சுருக்கமாகக் கூறினால், பல தூய மக்களுடன் சந்திப்புகள் நிகழ்ந்தன; அவற்றை விவரிப்பது நீண்டு கொண்டே போகும்.

அதுமட்டுமின்றி, ஆன்மிக ஒளிகள் பச்சை மற்றும் சிவப்பு நிறத் தூண்களாக உருவகப்படுத்தப்பட்டு மிக அழகாகவும் மனதைக் கவரும் விதத்திலும் காட்சியளித்தன. அவற்றைத் எனது சொற்களால் விவரிக்க இயலாது. பூமியிலிருந்து நேராக வானத்தை நோக்கிச் சென்ற அந்த ஒளித்தூண்களில் சில மின்னும் வெண்மை நிறத்திலும், சில சிவப்பு நிறத்திலும் இருந்தன. அவற்றைக் காணும்போது உள்ளத்தில் பேரானந்தம் ஏற்பட்டது. இந்த உலகில் அத்தகைய இன்பம் தரும் பொருள் வேறெதுவும் இருக்க முடியாது. அவற்றைக் காணும்போது உள்ளத்திற்கும், ஆன்மாவுக்கும் இன்பம் கிடைத்தது. எனது கருத்தின்படி, அந்தத் தூண்கள் இறைவனுக்கும் அடியானுக்கும் இடையிலான அன்பின் பிணைப்பைக் காட்டும் உருவகங்களாகும். அதாவது, ஓர் ஒளி உள்ளத்திலிருந்து மேலே கிளம்பியது; மற்றோர் ஒளி மேலிருந்து கீழே இறங்கியது. இவை இரண்டும் இணைந்தே அந்தத் தூணாக உருவெடுத்தது.

அதாவது கீழிருந்து மேலாகவும் மேலிருந்து கீழாகவும் வந்து ஒன்றிணைந்த தூண்கள் அவை.

இவை ஆன்மிக விஷயங்களாகும். உலகத்தால் இவற்றை அடையாளம் காண முடியாது. ஏனெனில் இவை உலகின் கண்களை விட்டு வெகு தொலைவில் உள்ளன. ஆனால், இவ்வுலகில் இத்தகைய செய்திகளைப் பெறுபவர்களும் இருக்கவே செய்கின்றார்கள்.'

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: சுருக்கமாகக் கூறினால், இந்த நீண்ட கால நோன்புகளின் மூலம் எனக்கு வெளிப்பட்ட அற்புதங்கள் பல்வேறு வகையான ஆன்மிகக் காட்சிகளாக இருந்தன. மற்றொரு பலன் என்னவெனில், இத்தகைய முயற்சிகளுக்குப் பிறகு, தேவை ஏற்படும் போது என்னால் நீண்ட காலம் பட்டினியைப் பொறுத்துக் கொள்ள முடியும் என்பதை உணர்ந்தேன். நான் பலமுறை எண்ணியதென்னவென்றால், உடல் பலம் கொண்ட, தடித்த மனிதர் ஒருவர் என்னுடன் சேர்ந்து பட்டினி இருக்க நிர்ப்பந்திக்கப்பட்டால், எனக்கு உணவின் மீது அதீத வேட்கை ஏற்படுவதற்கு முன்பே அவர் இறந்து விடுவார். மனிதன் பட்டினியைத் தாங்கும் சக்தியில் எந்த அளவிற்கு முன்னேற முடியும் என்பதற்கு எனக்கு இதிலிருந்து இந்த சான்று கிடைத்தது. ஒருவனுடைய உடல் இத்தகைய கடினத்திலும் கடினமான உழைப்பிற்குப் பழகாத வரை, சுகபோகங்களை விரும்பும் அத்தகைய நபர் ஆன்மிகப் படிநிலைகளுக்குத் தகுதியானவராக இருக்க முடியாது என்பது எனது நம்பிக்கையாகும்.'

மேலும் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: 'இருப்பினும், நான் இதனை ஒவ்வொருவருக்கும் அறிவுறுத்தவில்லை; எல்லோரும் இதையே செய்ய வேண்டும் என்றும் நான் கூறவில்லை. நானுங் கூட எனது சொந்த விருப்பத்தினால் இதனைச் செய்யவில்லை, மாறாக, அல்லாஹ்வின் கட்டளைப்படியே இதனைச் செய்தேன். கடுமையான உடல் வருத்தங்களை மேற்கொண்டு, இறுதியில் மூளை நரம்புகள் பாதிக்கப்பட்டுப் பைத்தியமான பல அறிவற்ற மனிதர்களை நான் பார்த்திருக்கிறேன். மூளையில் வறட்சி ஏற்பட்டு மூளை வேலை செய்வதை விட்டு விட்டது. அவர்களின் எஞ்சிய வாழ்நாள் மனநோயிலோ அல்லது காசநோய் போன்ற பிற நோய்களிலோ கழிந்தது. மனிதர்களின் மூளை மற்றும் உடல் வலிமை ஒரே சீராக இருப்பதில்லை. எனவே, இயற்கையிலேயே பலவீனமான உடல்நிலை கொண்டவர்களுக்கு இதுபோன்ற உடல் ரீதியான கடும் பயிற்சிகள் பொருத்தமானதல்ல; அவர்கள் மிக விரைவில் ஆபத்தான நோய்களுக்கு உள்ளாகி விடுவார்கள்.

எவ்வாறிருப்பினும், இஸ்லாம் என்பது ஒரு நடுநிலையான மார்க்கமாகும். இதில் அல்லாஹ்வின் சிறப்பான உதவியும் அடங்கியுள்ளது. எனவே, நான் செய்ததைக் செய்ய ஒவ்வொருவரும் முயற்சிக்கக் கூடாது என்று அன்னார் (அலை) கூறினார்கள்.

ஒருவன் தனது சுய விருப்பத்தின் அடிப்படையில் கடுமையான ஆன்மிகப் பயிற்சிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாமல், எளிமையான மார்க்கத்தைப் பின்பற்றுவதே சிறந்தது. மார்க்கத்தின் சலுகைகளையும் பொதுவான மார்க்கக் கடமைகளையும், சுன்னத்தான வழிமுறைகளையும் கடைபிடியுங்கள். அல்லாஹ்விடமிருந்து ஏதேனும் ஓர் இல்ஹாம் கிடைத்து, அது இஸ்லாமிய ஷரீஅத்திற்கு முரணாக இல்லையென்றால், அதனை நிறைவேற்றுவது அவசியமாகும். ஆனால், இன்றைய காலத்து அறிவற்ற பல ஃபக்கீர்மார்கள் கற்றுக்கொடுக்கும் இத்தகைய கடும் பயிற்சிகளின் முடிவு நன்றாக இருப்பதில்லை. எனவே, அவற்றிலிருந்து விலகி இருப்பது அவசியமாகும். (அல்பரிய்யா, ரூஹானீ கஸாயின், தொகுதி 13, பக்கம் 196 - 200, அடிக்குறிப்பு)

இன்றைய காலத்திலும் கூட சிலர் இதைச் செய்யுங்கள், அதைச் செய்யுங்கள் என்று கூறுகிறார்கள்;

அத்தகையவர்களின் பேச்சுகளை ஏற்கக் கூடாது. இக்காலத்தில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் இவ்வாறே கூறப்படுகிறது.நடுநிலைத் தன்மை எங்குள்ளது? என்று ஒரு மனிதன் ஆராய்ந்து, அதையே கடைபிடிக்க வேண்டும். தனது சக்திக்கு உட்பட்டு அல்லாஹ்வுக்கான உரிமைகள் மற்றும் படைப்பினங்களுக்கான உரிமைகள் ஆகியவற்றை நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும். இறைவணக்கத்திற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காட்டியுள்ள வழிமுறைகளையும், குறைந்தபட்ச அளவுகோல்களையும் அடைய கண்டிப்பாக முயற்சி செய்ய வேண்டும்; அதில் படிப்படியாக முன்னேற வேண்டும்.

கொஞ்சம் கொஞ்சமாக முன்னேற்றமும் கிடைக்கிறது. ஆனால் தேவையின்றி கடினத்தில் ஆழ்த்திக் கொள்வதை இஸ்லாம் தடை செய்துள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களும் இதையே தடுத்துள்ளார்கள்.

அன்னார் (அலை) சிறுவயது முதலே எத்தகைய நிலையில் இருந்தார்கள் என்பது குறித்து ஓர் அறிவிப்பு வருகிறது. மேஸ்திரி ஃபக்கீர் முஹம்மது ஸாஹிப் கூறுகிறார்கள்:

**எனது தந்தையார் - அவரது பெயர் ஜீவா ஆகும். அன்னார் அடிக்கடி ஒரு சம்பவத்தைக் கூறுவார். அதாவது, ஒருமுறை மிர்ஸா ஸாஹிப்**

மாடியிலிருந்து கீழே விழுந்துவிட்டார்கள். மேலும் பலத்த காயமடைந்தார்கள். அந்தச் செய்தி எங்களுக்குத் தெரிந்ததும், நாங்கள் நலம் விசாரிக்கச் சென்றோம். அன்னாருக்கு நினைவு திரும்பியவுடன், அவர்கள் முதலில் கேட்ட கேள்வி, 'தொழுகை நேரம் வந்துவிட்டதா?' என்பதாகும். அந்த அளவிற்குத் தொழுகையின் மீது அன்னார் (ஸல்) நேசம் கொண்டிருந்தார்கள்.

நான் சிறுவராக இருந்தபோது எனது தந்தை இந்த நிகழ்வைக் கூறுவார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் டாக்டர் மீர் முஹம்மது இஸ்மாயீல் ஸாஹிப் அவர்களின் அறிவிப்பை எடுத்துரைக்கிறார்கள்: 1895 ஆம் ஆண்டு ரமலான் மாதத்தைக் காதியானில் கழிக்க எனக்கு நல்வாய்ப்பு கிடைத்தது. அந்த மாதம் முழுவதும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்குப் பின்னால் நின்று நான் தஹஜ்ஜுத் அதாவது, தராவீஹ் தொழுதேன். அன்னார் (அலை) வித்ரு தொழுகையை இரவின் ஆரம்பப் பகுதியிலேயே தொழுது விடுவார்கள். இரவின் இறுதிப் பகுதியில் எட்டு ரக்அத்கள் தஹஜ்ஜுத் இரண்டு, இரண்டு ரக்அத்களாக தொழுவார்கள். அதில் எப்போதும் முதல் ரக்அத்தில், **ஆயத்துல் குர்ஸியையும் அதாவது,** اَللّٰهُ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ **-விலிருந்து** وَهُوَ الْعَلِيُّ الْعَظِيْمُ வரை (ஓதுவார்கள்). இரண்டாவது ரக்அத்தில் சூரா இக்லாஸ்ஸை ஓதுவார்கள். ருகூஃ மற்றும் ஸஜ்தாக்களில்: يَا حَيُّ يَا قَيُّوْمُ بِرَحْمَتِكَ اَسْتَغِيْثُ என்று ஓதுவார்கள். நான் கேட்கும் அளவிற்கு (நிதானமான குரலில்) அன்னார் (அலை) ஓதுவார்கள்.

அதாவது, மெதுவான சத்தத்தில் ஓதுவார்கள்; அது மிக உரத்த சத்தமாகவும் இருக்காது; மிகக் குறைவாகவும் இருக்காது.

மேலும் அன்னார் (அலை) ஸஹ்ரி உணவைத் தஹஜ்ஜுத் தொழுகைக்குப் பிறகு உண்பார்கள். எந்த அளவு தாமதப்படுத்துவார்கள் என்றால், சில நேரங்களில் உண்ணும்போது பாங்கு கூறப்பட்டு விடும். சில சமயம் பாங்கு முடியும் வரை கூட அன்னார் உண்பார்கள்.

இது குறித்து ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் எழுதும்போது, 'உண்மையில், கிழக்குத் திசையில் அதிகாலை வெளிச்சம் தோன்றும் வரை ஸஹ்ரி உண்பது அனுமதிக்கப்பட்டதாகும். அதற்கும் பாங்கிற்கும் எந்த நேரடித் தொடர்பும் இல்லை. ஏனெனில் அதிகாலை வெளிச்சம் தோன்றிய பிறகே ஸுப்ஹு பாங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே மக்கள் பாங்கையே ஸஹருக்கான இறுதி நேரமாகக் கருதுகிறார்கள். காதியானில் அதிகாலை வெளிச்சம் தோன்றிய உடனேயே பாங்கு சொல்லப்படும் என்பதால், சில சமயம் தவறாகவோ, கவனக்குறைவாகவோ முன்னரே பாங்கு சொல்லப்பட வாய்ப்புண்டு. எனவே அத்தகைய நேரங்களில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் பாங்கு சத்தத்தைக் குறித்துக் கவலைப்படாமல், அதிகாலை வெளிச்சம் தெளிவாகத் தெரியும் வரை ஸஹ்ரி உண்பார்கள்' என்று குறிப்பிடுகிறார்கள்.

இந்த விவகாரத்தில், அறிவுப்படியும் கணக்குப்படியும் அதிகாலை தொடங்கிய உடனே உணவை நிறுத்திவிட வேண்டும் என்பது ஷரீஅத்தின் நோக்கமல்ல; மாறாக, பொதுவான மக்களின் பார்வையில் அதிகாலை வெளிச்சம் புலப்படும் போது உணவை நிறுத்துவதாகும். 'தபய்யுன்' என்ற சொல் இந்த விஷயத்தையே குறிக்கிறது. ஹதீஸிலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறும்போது, 'பிலாலின் பாங்கைக் கேட்டு ஸஹ்ரியை நிறுத்தாதீர்கள்; இப்னு மக்தூமின் பாங்கு வரை உண்ணுங்கள்' என்றார்கள். ஏனெனில் இப்னு மக்தூம் கண்பார்வையற்றவர். அதிகாலை ஆகிவிட்டது என்று மக்கள் சலசலக்கும் வரை அவர் பாங்கு சொல்ல மாட்டார்.

எவ்வாறிருப்பினும், இன்றைய காலம் இன்னும் நவீன காலமாகிவிட்டது. நவீனக் கருவிகள் மூலம் அதிகாலை நேரத்தைத் துல்லியமாகக் கணக்கிட முடிகிறது. எனவே, பொதுவாக பாங்குச் சத்தமே (ஸஹ்ரி முடிப்பதற்கான) இறுதி எல்லையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது; இதைப் பேணுவதற்குத்தான் முயற்சி செய்யப்படுகிறது. சில நேரங்களில் தவறுகள் ஏற்படக்கூடும்; ஆனால் ஏதேனும் ஒரு தவறு காரணமாக பாங்கு முன்னரே சொல்லப்பட்டுவிட்டாலும், நான் கூறிய விஷயமே இதற்கும் பொருந்தும். ரமலான் மாதம் தொடங்கவுள்ள நிலையில் இது ஒரு வழிகாட்டலாகும். ஆயினும், 'விழிந்து விட்டதா இல்லையா' என்று பார்த்துக் கொண்டே இருக்கும் அளவுக்கு மக்கள் அதிக மெத்தனமாக ஆகிவிடக் கூடாது.

எவ்வாறிருப்பினும், நமது பாங்கு மற்றும் கால அட்டவணைகள் மிகத் துல்லியமாகக் கணக்கிடப்பட்டுள்ளன. இன்றைய காலம் முந்தைய காலத்தை விட நவீனமானது என்பதால் பிழைகளுக்கான வாய்ப்பு குறைவு. எனவே, ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு நாட்டிற்கும் தயாரிக்கப்பட்டுள்ள நேர அட்டவணையை பின்பற்றிச் செயல்படுவதே அவசியமாகும்.'

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஓர் அறிவிப்பை எடுத்துரைக்கிறார்கள். முஃப்தி முஹம்மது ஸாதிக் ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் காலத்தில் ஒருமுறை ' இஸ்திஸ்கா' - மழை வேண்டி தொழப்படும் தொழுகை நடைபெற்றது. அதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களும் கலந்து கொண்டார்கள். மௌலவி முஹம்மது ஹஸன் ஸாஹிப் (ரலி) மர்ஹூம் அவர்கள் இமாமாக இருந்தார்கள் என்று கருதுகிறேன். அந்தத் தொழுகையில் மக்கள் அனைவரும் அதிகமாக அழுதார்கள். ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மிகுந்த மனக்கட்டுப்பாட்டுடன் இருந்ததால், அன்னார் அழுவதை நான் பார்க்கவில்லை. அதற்குப் பிறகு, மிக விரைவில் மேகங்கள் திரண்டு மழை பெய்தது எனக்கு நினைவிருக்கிறது; சொல்லப்போனால் அன்றைய தினமே மழை பெய்துவிட்டது.'

எவ்வாறிருப்பினும், இதைக் கொண்டு அன்னார் வெளியே தொழுகையில் அழுவதில்லை என்று எவரும் கருதிவிடக் கூடாது. தமது எஜமானராகிய ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றி அன்னார் செய்த இறைவணக்கம் குறித்து வேறு பல அறிவிப்புகள் உள்ளன. அன்னார் (அலை) ஸஜ்தா செய்யும்போது, அன்னாருடைய நெஞ்சிலிருந்து ஒரு பாத்திரம் கொதிப்பது போன்ற சத்தம் வரும். அந்த அளவிற்கு ஒரு வலியுடனும், வேதனையுடனும் அழுது கொண்டிருப்பார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் அம்மா ஜான் நுஸ்ரத் ஜஹான் பேகம் ஸாஹிபா (ரலி) அவர்களின் அறிவிப்பை எடுத்துரைக்கிறார்கள்: தாயார் கூறியதென்னவென்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஐவேளை கடமையான தொழுகைகளைத் தவிர, பொதுவாக இரண்டு வகை நஃபில் தொழுகைகளைத் தொழுவார்கள். ஒன்று, இஷ்ராக் தொழுகை . இரண்டு அல்லது நான்கு ரக்அத்கள் தொழுவார்கள்; ஆனால் இதை எப்போதும் வழக்கமாகத் தொழாமல் அவ்வப்போது தொழுவார்கள். இரண்டாவது, 'தஹஜ்ஜுத் தொழுகை' எட்டு ரக்அத்கள்; இதனை அன்னார் (அலை) எப்போதும் தொழுவார்கள். உடல்நிலை மிகவும் சரியில்லாத காலங்களில் மட்டுமே தஹஜ்ஜுத் நேரத்தில் படுக்கையில் படுத்தவாறே துஆ செய்வார்கள். அன்னாருடைய இறுதிக்காலத்தில் உடல் பலவீனம் காரணமாகப் பொதுவாக அமர்ந்த நிலையிலேயே தஹஜ்ஜுத் தொழுகையை நிறைவேற்றினார்கள். (ஸீரத்துல் மஹ்தி, தொகுதி 1, பாகம் 1, பக்கம் 4, அறிவிப்பு- 3)

ஹஸ்ரத் மௌலவி யாகூப் அலி ஸாஹிப் (ரலி) அவர்கள் எழுதியதாவது: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் நீதிமன்ற வழக்குகளுக்காகச் செல்லும்போது, தமது தந்தையின் கட்டளைக்குக் கீழ்ப்படிவதற்காகவே செல்வார்கள். அங்கு வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதுகூட எந்த ஒரு தொழுகையும் விடுபட்டுவிடக் கூடாது என்பதில் மிகக் கவனமாக இருப்பார்கள்; ஒருபோதும் தொழுகையை அன்னார் (அலை) விட்டதில்லை. அவ்வாறே, அல்லாஹ்வின் உரிமைகளை நிறைவேற்றுவதில் ஒருபோதும் கவனமற்று இருந்ததில்லை. நீதிமன்றத்தில் வழக்கு நடந்து கொண்டிருக்கும் போது தொழுகை நேரம் வந்துவிட்டால், தமக்கு வேறு எந்த வேலையும் இல்லாதது போலத் தொழுகையில் ஈடுபட்டு விடுவார்கள். பல நேரங்களில் அன்னார் (அலை) தொழுகையில் இருக்கும்போது

திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

நீதிமன்றத்தில் விசாரணைக்காக அழைப்பார்கள்; ஆனால் அன்னார் எவ்விதப் பதற்றமும் இன்றி அமைதியான உள்ளத்துடன் தொழுகையைத் தொடர்வார்கள்.

ஒருமுறை அன்னார் (அலை) கூறினார்கள்: 'நான் பட்டாலாவுக்கு ஒரு வழக்கு விசாரணைக்காகச் சென்றிருந்தேன். தொழுகை நேரம் வந்ததும் நான் தொழத் தொடங்கினேன்.

அதாவது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தொழத் தொடங்கினார்கள்.

நீதிமன்ற ஊழியர் என்னை அழைத்தார்; ஆனால் நான் தொழுகையில் இருந்தேன். எதிர்த்தரப்பினர் ஆஜராகி, நான் வரவில்லை என்பதைச் சாதகமாக்கி ஒருதலைப்பட்சமாகத் நடவடிக்கை எடுத்து தீர்ப்பு வழங்கும்படி வற்புறுத்தினார்கள். ஆனால் நீதிமன்றம் அதைப் பொருட்படுத்தாமல், அவர்களுக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கி எனக்குச் சாதகமாக தீர்ப்பு கொடுத்தது. நான் தொழுகையை முடித்துவிட்டுச் சென்றபோது, நீதிபதி சட்டப்படி எனது வருகையின்மையைக் கவனித்திருப்பார் என்று எண்ணினேன். ஏனெனில் ஒரு தரப்பினர் வராதபோது அவருக்கு எதிராகத் தீர்ப்பு வழங்குவதே சட்டம். ஆனால், நான் ஆஜராகி 'நான் தொழுது கொண்டிருந்தேன்' என்று கூறியபோது, நான் ஏற்கனவே உங்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கிவிட்டேன் என்று அவர் கூறினார். இதுவும் இறைவணக்கத்தின் அருளே ஆகும்; அல்லாஹ் இவ்வாறு அருள் புரிந்தான்.'

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் மற்றோர் அறிவிப்பை எழுதியுள்ளார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் வீட்டில் மக்ரிப் தொழுகை நடத்தும்போது, பெரும்பாலும் சூரா யூசுஃபின்

إِنَّمَآ أَشْكُوا۟ بَثِّى وَحُزْنِىٓ إِلَى ٱللَّهِ

நிச்சயமாக நான் எனது துயரத்தையும், கவலையையும் அல்லாஹ்விடமே முறையிடுகிறேன் என்ற வசனத்தை ஓதுவார்கள்.'

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறுகையில், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் குரலில் மிகுந்த உருக்கமும், வலியும் இருக்கும்; அன்னாருடைய ஓதல், அலை போன்ற ராகத்துடன் இருக்கும்' என்று குறிப்பிடுகிறார்கள்.

அவ்வாறே மிர்ஸா முஹம்மது தீன் ஸாஹிப் (ரலி) கூறுகையில், 'அன்னார் (அலை) கடமையான தொழுகைகளை பள்ளிவாசலில் தொழுவார்கள்; சுன்னத் மற்றும் நஃபில் தொழுகைகளை வீட்டிலேயே தொழுவார்கள். இஷா தொழுகைக்குப் பிறகு உறங்கிவிட்டு, நள்ளிரவுக்குப் பின் விழித்து நஃபில் தொழுவார்கள். அதன் பிறகு திருக்குர்ஆன் ஓதுவார்கள். ஒரு அகல் விளக்கைத் ஏற்றி வைத்துக்கொண்டு சுப்ஹு பாங்கு சொல்லும் வரை திலாவத் செய்து கொண்டிருப்பார்கள்' என்று கூறியுள்ளார்கள். (அல்ஃபஸ்ல் காதியான் நாளிதழ், டிசம்பர் 2, 1941, பக் 4)

மற்றோர் வரலாற்று ஆசிரியர் எழுதியுள்ளதாவது: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்குத் திருக்குர்ஆன் மற்றும் ரஸூல் (ஸல்) அவர்களின் சுன்னத்தின் மீது நேசம் இருந்தது. அன்னாருடைய இறைவணக்கங்கள் ஒருபோதும் திருக்குர்ஆன் மற்றும் சுன்னத்தின் வரம்புகளைத் தாண்டிச் சென்றதில்லை. ஐவேளைத் தொழுகைகளைத் தவிர தஹஜ்ஜுத் தொழுகையை மிகவும் முறையாகப் பேணி வந்தார்கள். இஷ்ராக் தொழுகையையும் தொழுவார்கள்; ஆனால் தஹஜ்ஜுத் தொழுகையின் மீது அதிக அன்பு கொண்டிருந்தார்கள். தொழுகையில் அல்லாஹ்வின் மீது அன்னாருடைய கவனமும் ஈடுபாடும் எந்த அளவிற்கு இருக்குமென்றால், அன்னார் இவ்வுலகிலேயே இல்லாதது போன்ற ஒரு நிலை ஏற்படும். தஹஜ்ஜுத் தொழுகையில் சூரா பாத்திஹாவை மிகுந்த வலியுடனும், கவனத்துடனும் ஓதுவார்கள்; அதிக துஆக்களையும் செய்வார்கள்.

ஆரம்பக் காலங்களில் சில சமயம் தொழுகையில் (முழுமையான) கவனம் ஏற்படவில்லை என்றால், அன்னார் (அலை) மீண்டும் மீண்டும் தொழுவார்கள். 'இந்த யுக்தியை நான் ஒரு குடிகாரனிடமிருந்து கற்றுக் கொண்டேன்' என்று அன்னார் (அலை) கூறுவார்கள்.

அன்னார் (அலை) கூறினார்கள்:

'ஒருமுறை எனக்குத் தொழுகையில் முழு கவனம் ஏற்படவில்லை. எனவே நான் காட்டிற்குச் சென்று தொழலாம் எனப் புறப்பட்டேன். வழியில் கடைவீதி ஒன்றைக் கடந்தபோது, ஓர் இந்து தனது நண்பனிடம், நேற்று இரவு நாங்கள் ஒரு பெக் (Peg) மது அருந்தினோம். ஆனால் போதை ஏற்படவில்லை; எனவே இரண்டாவது பெக் அருந்தினோம். அப்போதும் போதை ஏற்படாததால் மூன்றாவது பெக் அருந்தினோம். இவ்வாறு போதை ஏறும் வரை மீண்டும், மீண்டும் அருந்தினோம் என்று கூறிக் கொண்டிருந்தான்.' அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: 'நானும் ஆன்மிகப் போதை ஏற்படும் வரை மீண்டும் மீண்டும் தொழுவேன்' என்று எண்ணினேன். (டாக்டர் பஷாரத் அஹ்மது ஸாஹிப் அவர்களின் நூல், முஜத்திதே அஃஸம், தொகுதி 1, பக்கம் 1 - 26, வெளியீடு- அஞ்சுமன் அஹ்மதிய்யா இஷாஅத்தே இஸ்லாம், லாஹூர்)

கடமையான தொழுகைகளை இவ்வாறு மீண்டும் மீண்டும் தொழ முடியாது. நஃபீல்களின் பக்கம் கவனம் இருந்தது. நஃபில்களைக் குறித்து அன்னார் (அலை) கூறினார்கள்: போதை ஏற்படும் அளவுக்கு மீண்டும் மீண்டும் நஃபில் தொழுவேன். அதாவது தொழுகையில் மனம் ஒருமித்து விடும் வரை தொழுவேன் என்றார்கள்.

அதாவது, முழு கவனம் பெறுவதற்கு. தொழுகைகளைத் தவிர, திருக்குர்ஆன் ஓதுதல், துரூத் ஷரீஃப் மற்றும் இஸ்திஃபார் ஓதுதல் ஆகியவை அன்னாரின் வழக்கமான நடைமுறையாக இருந்தன. திருக்குர்ஆன் மீதோ அன்னாருக்கு (மிகுந்த) நேசம் இருந்தது; பகல், இரவு எனப் பார்க்காமல் அமர்ந்திருக்கும் போதும், நடக்கும் போதும் திருக்குர்ஆன் ஓதிக்கொண்டே இருப்பார்கள்; ஓதும்போது தேம்பித் தேம்பி அழுவார்கள். நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல, சில இடங்களில் மக்கள் முன்னிலையில் அழவில்லை என்பதால் அன்னார் (அலை) அழமாட்டார்கள் என்று அர்த்தமல்ல. திருக்குர்ஆன் ஓதும்போதும் அன்னார் (அலை)




அழுவார்கள். அன்னார் (அலை) மீது உருக்கம் ஏற்பட்டு விடும். துரூத் ஷரீஃபை உணர்ந்து அதிக அளவில் ஓதுவார்கள். எந்த அளவு வேதனையுடன் ஓதுவார்கள் என்றால், சில நேரங்களில் அழுகையும் சேர்ந்து விடும்.

ஒருமுறை இஷ்ராக் தொழுகை தொழுதது குறித்து எடுத்துரைக்கும்போது தேனின் சிறப்பையும் கூறினார்கள். (அவ்விஷயம்) நுட்பம் மற்றும் இறைவணக்கத்தில் சென்று முடிந்தது. நீரிழிவு நோயின் போது தேன் சாப்பிடலாமா? கூடாதா? என்ற பேச்சு வந்தபோது, அன்னார் (அலை) கூறினார்கள்: எனக்கு நீரிழிவு நோயினால் கடுமையான வேதனை இருந்தது. மருத்துவர்கள் இதில் இனிப்பு உண்பது மிகவும் பாதிப்பை ஏற்படுத்தும் எனக் கூறினார்கள்.

அதாவது, ஒருவருக்கு சர்க்கரைநோய் ஏற்பட்டால் இனிப்பு உண்பது மிகவும் தீங்கு ஏற்படுத்தும் என்பதாகும்.

அன்னார் (அலை) கூறுகிறார்கள்: 'இன்று நான் இதைக் குறித்துச் சிந்தித்துக் கொண்டிருந்தபோது ஓர் எண்ணம் தோன்றியது; கடைவீதியில் கிடைக்கும் சர்க்கரை போன்றவற்றை பெரும்பாலும் பாவிகளே தயாரிக்கிறார்கள். அதனால் பாதிப்பு ஏற்படுவதில் வியப்பில்லை. ஆனால் தேன் என்பது அல்லாஹ்வின் வஹீயின் மூலம் தயாரானது. எனவே அதன் தன்மை மற்ற இனிப்புகளைப் போல் இருக்காது. தேனும் மற்ற இனிப்புகளைப் போல இருந்திருந்தால் அனைத்தையும் பார்த்து, (மனிதர்களுக்கு இதில் நிவாரணம் உள்ளது) என்று அல்லாஹ் கூறியிருப்பான். ஆனால் தேனை மட்டுமே சிறப்பாக குறிப்பிட்டுள்ளான். எனவே இதன் சிறப்பம்சமே அதன் நன்மைகளுக்கு ஆதாரமாகும். இதன் தயாரிப்பு வஹீயின் மூலம் நடைபெறுவதால், மலர்களிலிருந்து சாறை உறிஞ்சும் தேனீ நிச்சயமாக நன்மையான பகுதிகளை மட்டுமே எடுக்கும். இந்த எண்ணத்துடன் நான் தேனில் சிறிதளவு தாழம்பூவின் சாறை கலந்து பருகினேன். சிறிது நேரத்திலேயே எனக்குப் பெரும் பலன் கிடைத்தது; என்னால் எழுந்து நடமாட முடிந்தது. அதற்கு முன்பு நீரிழிவு நோயினால் அதிக பலவீனம் ஏற்பட்டிருந்தது. பின்னர்

நான் என் குடும்பத்தாரை அழைத்துக் கொண்டு தோட்டம் வரை நடந்து சென்று அங்கே பத்து ரக்அத்கள் இஷ்ராக் தொழுகையை நிறைவேற்றினேன்.

(மல்ஃபூஸாத், தொகுதி 7, பக்கம் 34 - 35, 2022-ம் ஆண்டு பதிப்பு)

ஹஸ்ரத் முஃப்தி முஹம்மது ஸாதிக் ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: 'ஒருமுறை மிகவும் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. அனைத்து கட்டடங்களும் பொருட்களும் பலமாக அதிரத் தொடங்கின. மக்கள் அனைவரும் திகைப்படைந்து, அச்சத்துடன் பதற்றமடையத் தொடங்கினார்கள். அத்தகைய நேரத்தில் இறைவனின் மஸீஹின் நிலை காணத் தகுந்ததாக இருந்தது. ஏனெனில், இவ்வாறான வானுலக மற்றும் மண்ணுலக நிகழ்வுகளின் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முகத்தில் இறையச்சம் வெளிப்படுவதை நாம் ஹதீஸ்களில் வாசித்திருக்கிறோம். வானில் ஒரு சிறு மேகம் தென்பட்டாலும் அன்னார் (அலை) அமைதியிழந்து விடுவார்கள்; சில சமயம் வீட்டிற்கு வெளியே வருவார்கள்; சில சமயம் உள்ளே செல்வார்கள்.

சுருக்கமாகக் கூறினால், யார் இறைவனை அதிகம் அறிகிறாரோ, அவரே அவனை அதிகம் அஞ்சுபவராவார் என்ற பாரசீகப் பொன்மொழியைச் செயல் வடிவில் அல்லாஹ்வின் தூதர் அவர்கள் அந்த நேரத்திலும் முற்றிலும் உண்மையாக நிரூபித்துக் காட்டினார்கள்.

எவ்வாறிருப்பினும், நிலநடுக்கம் தொடங்கிய உடனேயே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தமது குடும்பத்தினர் மற்றும் குழந்தைகளுடன் அல்லாஹ்வின் முன்னிலையில் துஆ செய்வதில் மூழ்கிவிட்டார்கள்; தமது இறைவனின் முன்னிலையில் ஸஜ்தாவில் விழுந்தார்கள். மிக நீண்ட நேரம் கியாம், ருகூஃ மற்றும் ஸஜ்தாக்களில் அன்னாருடைய முழு குடும்பமும் பணியாளர்களுடன் சேர்ந்து இறைவனது வல்லமையைக் கண்டு நடுங்கியவாறு வீழ்ந்து கிடந்தனர். இறைவனின் தன்னிறைவான தன்மையைக் கண்டு அஞ்சி நடுங்கிக் கொண்டிருந்தனர்.

(ஹஸ்ரத் முஃப்தி முஹம்மது ஸாதிக் ஸாஹிப் (ரலி) அவர்களின் நூல், திக்ரே ஹபீப், பக்கம் 102)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஜமாஅத்தாக தொழுவதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தவாறு கூறுகிறார்கள்: இக்காலத்தில் மக்கள் தொலைதூரத்தில் வசிப்பதாலும், பள்ளிவாசலுக்கு வருவது கடினமாக இருப்பதாலும் (மக்கள் வீடுகளிலேயே தொழுது கொள்கிறார்கள்).

அன்னாருடைய காலத்திலும் தூரம் அதிகமாக இருந்ததாலும் வாகன வசதிகள் இல்லாததாலும் மக்கள் வீடுகளிலேயே தொழுது வந்தனர்.

இதைக் குறித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறும்போது, எனவே, வீடுகளில் தனியாகத் தொழாமல் ஜமாஅத்தாகத் தொழ வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள். அன்னார் (அலை) மேலும் கூறுகையில்: 'ஜமாஅத்தான தொழுகையை நிலைநாட்ட ஒரு வழிமுறை என்னவெனில், மனைவி மற்றும் குழந்தைகளை ஒன்றிணைத்து வீட்டிலேயே ஜமாஅத்தாகத் தொழ வைப்பதாகும். உங்களால் பள்ளிவாசலுக்கு செல்ல முடியாவிட்டால், வீட்டிலேயே ஜமாஅத்தாக தொழுங்கள். ஏனெனில் தூரம் போன்ற காரணங்களால் தனியாகத் தொழும் பழக்கம் ஏற்பட்டுவிட்டது. இதனால் ஜமாஅத்தான தொழுகையின் முக்கியத்துவம் மக்களின் உள்ளங்களில் குறைந்துவிட்டது.

இதையே இன்றும் நாம் காண்கிறோம். எனவே இப்பழக்கத்தைக் கைவிட்டு, ஜமாஅத்தாக தொழுவதை ஒரு வழக்கமாக ஆக்கிக் கொள்ளுங்கள். இன்றும் எங்கு குறைபாடுகள் உள்ளனவோ அங்கெல்லாம் மக்கள் இதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். வீடுகளில் குழந்தைகளுடன் தொழுங்கள்; அதன் மூலம் குழந்தைகளுக்கும் தொழுகைக்கான பழக்கம் ஏற்படும்.

பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் முன்னுதாரணத்தை எடுத்துரைத்தவாறு கூறுகிறார்கள்:

பள்ளிவாசலுக்குச் செல்ல முடியாத அத்தகைய தருணங்களில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் வீட்டிலேயே ஜமாஅத்தாக தொழுது விடுவார்கள். தவிர்க்க முடியாத காரணங்களைத் தவிர மற்ற நேரங்களில் அன்னார் (அலை) தனியாகத் தொழுதது மிக அரிதே. பெரும்பாலும் எங்களது தாயாரைத் தம்முடன் சேர்த்துக்கொண்டு ஜமாஅத்தாக தொழுவார்கள். தாயாருடன் மற்ற பெண்களும் சேர்ந்து கொள்வார்கள். (ஃபஸ்ஸ் அஹம் ஸரூரீ உமூர், அன்வாருல் உலூம், தொகுதி 16, பக்கம் 493)

ஹஸ்ரத் ஸய்யிது ஸைனுல் ஆபிதீன் வலியுல்லாஹ் ஷாஹ் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஓர் அறிவிப்பை எடுத்துரைக்கிறார்கள்:

நான் 1935 ஆம் ஆண்டு ஸியால்கோட் சென்றிருந்தேன். அங்கு 'மாயி ஹயாத் பீபி' என்ற முதிய பெண்மணியைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவர் ஃபஸ்ல் தீன் ஸாஹிப்பின் மகளும், ஹாஃபிஸ் முஹம்மது ஷஃபீ ஸாஹிப் காரீ (ரலி) அவர்களின் தாயாரும் ஆவார். நாங்கள் அவரைச் சந்திக்கச் சென்றபோது அவர் தனது வீட்டின் வாசலில் அமர்ந்திருந்தார். எங்களுக்கு அவரை அடையாளம் தெரியவில்லை; ஆனால் அவர் எங்களை அடையாளம் கண்டு 'அஸ்ஸலாமு அலைக்கும்' கூறி அங்கே அழைத்தார். அப்போது அவருக்கு 105 வயது. சிப்பாய் கலகத்தின் போது அலுவலகங்கள் மற்றும் நீதிமன்றங்கள் எரிக்கப்பட்ட போது தான் இளம்பெண்ணாக இருந்ததாகக் கூறி, தனது வயதின் முதிர்வை அவர் விளக்கினார்.

எவ்வாறிருப்பினும், அந்த உரையாடலின் போது அவர் கூறியதாவது: 'ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஆரம்பக் காலத்தில் ஸியால்கோட்டில் பணியாற்றிய காலத்திலிருந்தே எனக்கு அவர்களைத் தெரியும். அப்போது அவர்களுக்கு மீசை முளைக்கத் தொடங்கியிருந்த பருவம்; முழுமையாகத் தாடி வளரவில்லை. ஸியால்கோட் வந்த பிறகு ஹஸ்ரத் ஸாஹிப் அவர்கள் எனது தந்தையின் வீட்டிற்கு வந்து, 'மியா(ன்) ஃபஸ்ல் தீன் ஸாஹிப்! உங்களது மற்றொரு வீட்டை எனது தங்குமிடத்திற்காக வாடகைக்குத் தாருங்கள்' என்று கேட்டார்கள். எனது தந்தை கதவைத் திறக்க, ஹஸ்ரத் ஸாஹிப் அவர்கள் உள்ளே வந்தார்கள். தந்தை அங்கே தண்ணீர், கட்டில் மற்றும் தொழுகை விரிப்பு ஆகியவற்றைத் தயார் செய்து வைத்தார்கள். ஹஸ்ரத் ஸாஹிபின் பொருட்களையும் வைத்தார்கள். ஹஸ்ரத் ஸாஹிப் நீதிமன்றப் பணியிலிருந்து திரும்பியதும் முதலில் எனது தந்தையை அழைத்து, அவருடன் சேர்ந்துதான் வீட்டிற்குள் செல்வார்கள். மிர்ஸா ஸாஹிப் அவர்கள் பெரும்பாலும் எனது தந்தையுடன்தான் அமர்ந்து பேசுவார்கள். அன்னாருக்கான உணவு எங்கள் வீட்டிலேயே சமைக்கப்படும்; எனது தந்தைதான் உணவைக் கொண்டு போய் வழங்குவார். மிர்ஸா ஸாஹிப் (ரலி) அவர்கள் உள்ளே சென்றதும் கதவைச் சாத்திக்கொள்வார்கள்; பின்னர் முற்றத்தில் அமர்ந்து திருக்குர்ஆன் ஓதிக்கொண்டிருப்பார்கள். எனது தந்தை கூறுவார்: மிர்ஸா ஸாஹிப் அவர்கள் திருக்குர்ஆன் ஓதும்போது சில சமயம் ஸஜ்தாவில் விழுந்துவிடுவார்கள்; மிக நீண்ட நேரம் ஸஜ்தா செய்வார்கள். அந்த இடத்தில் அழுது அழுது தரை நனைந்துவிடும்.'

மாயி ஸாஹிபா இந்த நிகழ்வுகளைக் கூறும்போது, 'அன்னார் (அலை) மீது நான் அர்ப்பணம்' என்று பலமுறை கூறினார். 'தனது மகனின் முன்னிலையிலேயே அவர் இந்த விஷயத்தை கூறினார். ( ஸீரத்துல் மஹ்தி, தொகுதி 1, பாகம் 3, பக்கம் 594 - 595, அறிவிப்பு எண்: 625)

ஹஸ்ரத் ஷேக் யாகூப் அலி ஸாஹிப் இர்ஃபானி (ரலி) அவர்கள், டாக்டர் அல்லாமா இக்பால் அவர்களின் ஆசிரியராக இருந்த மௌலவி மீர் ஹஸன் ஸாஹிப் அவர்களின் ஓர் அறிவிப்பை எடுத்துரைக்கிறார்கள்:

மிர்ஸா ஸாஹிப் அவர்கள் முதலில் 'மஹல்லா காஷ்மீரியா(ன்)' பகுதியில் - அதாவது இந்த அடியேனின் எளிய இல்லத்திற்கு மிக அருகிலேயே - உம்ரா என்ற பெயர் கொண்ட ஒரு காஷ்மீரியின் வீட்டில் வாடகைக்கு வசித்து வந்தார்கள். நீதிமன்றத்திலிருந்து வந்தவுடன் திருக்குர்ஆன் ஓதுவதில் மூழ்கிவிடுவார்கள். அமர்ந்த நிலையிலும், நின்ற நிலையிலும், நடந்தவாறும் ஓதிக் கொண்டிருப்பார்கள்; மேலும் தேம்பித் தேம்பி அழுவார்கள். எத்தகைய பணிவு மற்றும் அச்சத்துடன் ஓதுவார்கள் என்றால் அதற்கு ஒப்பான ஒன்றை வேறு

Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9


எங்கும் காண முடியாது.

வழக்கமாக அக்கால நடைமுறைப்படி, மக்கள் நீதிமன்ற வேலைகளுக்காகவும், பரிந்துரைகளுக்காகவும் அன்னாரிடம் வரத் தொடங்கினர். நீதிமன்றப் பணியாளர்களிடம் மக்கள் செல்வது போலவே, தங்கள் தரப்பு வழக்கு தங்களுக்குச் சாதகமாக அமைய வேண்டும் என்ற நோக்கத்தில் அன்னாருடைய இடத்திற்கும் வரத் தொடங்கினர்.

நீதிமன்றத்தில் பணியாற்றுபவர்களிடம் பரிந்துரைக்காகச் செல்வது மக்களின் பொதுவான இயல்பாகவே இருந்து வந்துள்ளது; அந்த அடிப்படையிலேயே மக்கள் அன்னாரிடமும் வரத் தொடங்கினர்.

அந்த வீட்டின் உரிமையாளரான உம்ராவின் அண்ணன் மியான் ஃபஸ்ல் தீன் ஸாஹிப் ஆவார். அவர் அந்தப் பகுதியில் கண்ணியத்திற்குரியவராகக் கருதப்பட்டார். ஒருமுறை மக்கள் பரிந்துரைக்காகத் தன்னிடம் வந்திருப்பதைக் கண்ட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள், மியான் ஃபஸ்ல் தீன் -ஐ அழைத்து, 'மியான் ஃபஸ்ல் தீன்! இங்கு வந்து தங்களது நேரத்தையும், எனது நேரத்தையும் வீணாக்க வேண்டாம் என்று இவர்களிடம் சொல்லிவிடுங்கள்; என்னால் ஏதும் செய்ய இயலாது; நான் நீதிபதி அல்ல. எனது பணி எதுவோ அதை நீதிமன்றத்திலேயே முடித்துவிட்டு வந்துவிடுகிறேன் என்று கூறினார்கள். அதன் பிறகு மியான் ஃபஸ்ல் தீன் அந்த மக்களுக்குப் புரிய வைத்து அங்கிருந்து அனுப்பி விடுவார். (ஹயாதே அஹ்மது, தொகுதி 1, பாகம் 3, பக்கம் 370-371)

பட்டியாலாவைச் சேர்ந்த அஹ்மதி அல்லாத முன்ஷீ அப்துல் வாஹித் ஸாஹிப், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் திருக்குர்ஆன் திலாவத் குறித்துக் கூறும்போது: ' ஹஸ்ரத் ஸாஹிப் அவர்கள் 14, 15 வயதிலேயே நாள் முழுவதும் திருக்குர்ஆனை ஓதிக் கொண்டிருப்பார்கள்; மேலும் அதன் ஓரங்களில் குறிப்புகளை எழுதிக்


Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com


கொண்டே இருப்பார்கள்' என்று குறிப்பிடுகிறார். (தாரீக்கே அஹ்மதிய்யத், தொகுதி 1, பக்கம் 64)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களைக் குறித்து கூறுகிறார்கள்:

அன்னார் (அலை) தமது சிறுவயது முதலே தந்தையாரின் வாழ்க்கையில் உலக ரீதியான கசப்பான அனுபவங்களைக் கண்டதால், உலகத்தின் மீது அன்னாருடைய மனம் ஒட்டாமல் போனது. அன்னார் (அலை) சிறு குழந்தையாக இருந்தபோதே அன்னாருடைய அனைத்து ஆசைகளும் அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதிலேயே லயித்திருந்தன.'

அன்னாருடைய மிக இளம் வயது குறித்த ஓர் ஆச்சரியமான சம்பவத்தை அன்னாருடைய வரலாற்று ஆசிரியர் ஷேக் யாகூப் அலி ஸாஹிப் (ரலி) எழுதியுள்ளார்கள்:

அன்னாருக்கு மிகச் சிறிய வயதாக இருந்தபோது, பின்னாளில் யாரை மணந்து கொண்டார்களோ அந்தத் தம் வயது சிறுமியிடம், 'அதிர்ஷ்டமில்லாதவளே! அல்லாஹ் எனக்குத் தொழுகையை தொழும் நல்வாய்ப்பை வழங்க வேண்டும் என்று எனக்காக துஆ செய்' என்று கூறுவார்களாம்.' அன்னாருடைய மிக இளம் வயதின் இந்த வாசகத்திலிருந்து, அன்னாருடைய உள்ளத்தில் எத்தகைய உணர்வுகள் அலைமோதிக் கொண்டிருந்தன என்பதும், அன்னாருடைய விருப்பங்களின் மையப் புள்ளியாக இறைவன் மட்டுமே இருந்தான் என்பதும் புலனாகிறது. அத்துடன், மிகச் சிறு வயதிலேயே அன்னாருடைய புத்திக் கூர்மையையும் இது உணர்த்துகிறது. ஏனெனில், அந்த வயதிலேயே அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்பவன் அல்லாஹ் ஒருவனே என்பதையும், இறை வணக்கத்திற்கான நல்வாய்ப்பை வழங்குவதும் அவனது கைகளிலேயே உள்ளது என்பதையும் அன்னார் (அலை) அறிந்திருந்தார்கள். தொழுவதற்கு விரும்புவதும், அந்த விருப்பத்தை முழுமை செய்வதும் இறைவன் தான் என்று அறிந்திருந்தார்கள்.

மேலும், எந்தக் குடும்பத்தின் சிறியவர் முதல் பெரியவர் வரை உலகத்தையே தங்களது கடவுளாகக் கருதிக் கொண்டிருந்தார்களோ, அத்தகைய ஒரு வீட்டில் வளர்ந்தும் கூட எல்லா விதத்திலும் உலகக் கலப்பற்ற இத்தகைய தூய வார்த்தை வெளிப்படுவது என்பது, உலகில் ஒரு மகத்தான மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக அல்லாஹ்விடமிருந்து உதவி பெற்ற ஒருவரிடமிருந்து அன்றி வேறு யாரிடமிருந்தும் வெளிப்பட முடியாது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்களின் நூல், ஸீரத் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள், பக்கம் 9, மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா வெளியீடு)

ஹஸ்ரத் முஃப்தி முஹம்மது ஸாதிக் ஸாஹிப் அவர்கள் (ரலி) அறிவிக்கிறார்கள்:

'ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறினார்கள்: 'நான் சிறுவயது முதலே நோன்பு நோற்பதை வழக்கமாகக் கொண்டுள்ளேன். ஒருமுறை சிறுவயதில் நோன்பு நோற்ற போது உடல்நலம் குன்றியது; ஆனால் அதன் பிறகு 29 நோன்புகளையும் முழுமையாக வைத்தேன்; எவ்விதச் சிரமமும் ஏற்படவில்லை. அப்போது அந்தப் பெருநாள் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியான பெருநாளாக இருந்தது. நோன்பிற்கு என்று தனித்துவமான அருள்கள் உள்ளன. ஒவ்வொரு பழத்திற்கும் எவ்வாறு தனித்தனி சுவை உண்டோ, அவ்வாறே ஒவ்வொரு இறைவணக்கத்திற்கும் தனித்தனி இன்பம் உண்டு. இந்த இறை வணக்கங்களில் ஓர் ஆன்மிகம் உள்ளது; அதனை மனிதனால் எடுத்துரைக்க இயலாது. ஆர்வம் இருந்தால் வேதனைகளும் சிரமங்களும் குறைந்துவிடும். இறைவணக்கத்தில் மனிதனின் ஆன்மா மிக மென்மையாகித் தண்ணீரைப் போல் ஓடி இறைவனுடன் கலக்க வேண்டும் என்பதே அவசியமாகும்'. (முஃப்தி முஹம்மது ஸாதிக் ஸாஹிப் அவர்களின் நூல், திக்ரே ஹபீப், பக்கம் 193)

பிரபல தலைவரும், ஸமீன்தார் செய்தித்தாளின் ஆசிரியருமான ஸஃபர் அலி கான் ஸாஹிபின் தந்தை மௌலவி சிராஜுத்தீன் ஸாஹிப், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஸியால்கோட்டில் தங்கியிருந்த காலத்தின் செயல்பாடுகளைக் குறித்து எழுதும்போது கூறுகிறார்கள்: 1877 ஆம் ஆண்டு ஓர் இரவு காதியானில் அன்னாருடைய விருந்தினராக இருக்கும் கண்ணியம் எங்களுக்குக் கிடைத்தது. அந்நாட்களிலும் அன்னார் (அலை) இறைவணக்கத்திலும் திக்ருகளிலும் எந்த அளவிற்கு மூழ்கியிருந்தார்கள் என்றால், விருந்தினர்களிடம் கூட மிகக் குறைவாகவே பேசுவார்கள். (ஹயாத்தே அஹ்மது தொகுதி 1, பாகம் 3, பக்கம் 374)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் மற்றோர் அறிவிப்பை எடுத்துரைத்துள்ளார்கள்:

ஹஸ்ரத் பாயி அப்துர் ரஹ்மான் ஸாஹிப் காதியானி (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது, 1900 ஆம் ஆண்டு ஈதுல் அழ்ஹாவிற்கு ஒரு நாள் முன்பு ஹஜ்ஜுடைய நாளில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் மௌலவி நூருத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்களிடம், 'இந்த ஹஜ்ஜுடைய நாளை நான் குறிப்பாக துஆக்களில் கழிக்க விரும்புகிறேன்; எனவே துஆ செய்யக் கோரும் நண்பர்களின் பெயர்களைப் பட்டியலிட்டு எனக்கு அனுப்பி வையுங்கள்' என்று கூறினார்கள். அவ்வாறே அந்தத் தினத்தில் ஹஸ்ரத் மௌலவி நூருத்தீன் ஸாஹிப் அவர்களின் வாயிலாக ஏராளமான துஆ விண்ணப்பங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களிடம் வந்து சேர்ந்தன. சிலர் நேரடியாகவும் கடிதம் கொண்டு வந்து கொடுத்து துஆவுக்காக வேண்டினர். அந்த நாட்களில் பெருநாளை முன்னிட்டு வெளியூர்களிலிருந்து ஏராளமான நண்பர்கள் காதியானுக்கு வந்திருந்தனர். அவர்கள் ஹஸ்ரத் ஸாஹிபை சந்திக்கும் பொருட்டு காதியானுக்கு வருவார்கள். அவர்களும் இந்த இறை தூண்டுதலில் இணைந்து கொண்டனர். அந்த நாள் காதியானில் குறிப்பாக துஆக்களுடனும், வழக்கத்திற்கு மாறான மன்றாடுதல்களுடனும், பெரும் அருள்களுடனும் கழிந்தது. (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் எம்.ஏ (ரலி) அவர்களின் நூல், ஸீரத்தே தய்யிபா, பக்கம் 294)

ஜமாஅத்தான தொழுகைக்காக தமது உள்ளத்தில் எழும் இந்த உணர்வைக் குறித்து எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஒரு சபையில் கூறுகிறார்கள்:

எனது தலையின் நிலை


இன்றும் சரியாக இல்லை, தலைச்சுற்றல் இருந்து கொண்டே இருக்கிறது. ஆனால் ஜமாஅத் தொழுகைக்கான நேரம் வரும்போது, அனைவரும் ஜமாஅத்தாகத் தொழுவார்கள்; நான் அதில் கலந்துகொள்ள மாட்டேனோ என்ற எண்ணம் தோன்றுகிறது. அதாவது, மக்கள் ஒன்று கூடியிருப்பார்கள்; ஜமாஅத்தான தொழுகை நடக்கும். நான் கலந்து கொள்ள மாட்டேனா என்று நினைத்து நான் கவலைப் படுகிறேன். எனவேதான் தட்டுத்தடுமாறி இங்கு வந்து சேர்ந்தேன். (மல்ஃபூஸாத், தொகுதி 7, பக்கம் 1, 2022-ம் ஆண்டு பதிப்பு)

இன்று தலைச்சுற்றலும் இருக்கின்றது. ஆனால், இருப்பினும், எப்படியோ விழுந்து, எழுந்து நான் பள்ளிவாசலுக்கு வந்துவிட்டேன். பின்னர், அன்னார் (அலை) கூறினார்கள்: எவ்வாறிருப்பினும், எப்படியோ முயற்சி செய்து நான் பள்ளிவாசலுக்கு வந்துவிடுகிறேன். ஒருமுறை அல்ல, பலமுறை இவ்வாறு நிகழ்கின்றது; இன்றும் அவ்வாறே நடந்தது.

அன்னார் (அலை) உடல்நிலை சரியில்லாத நாட்களிலும் ஜமாஅத்துடன் தொழுவதற்கே முயற்சி செய்வார்கள். ஹஸ்ரத் மௌலவி அப்துல் கரீம் ஸாஹிப் ஸியால்கோட்டி (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களைச் சந்திப்பதற்கான பொதுவான இடம் பள்ளிவாசல்தான். அன்னார் நோயுற்றிராத காலங்களில் தவறாமல் ஐவேளைத் தொழுகைகளையும் ஜமாஅத்துடன் தொழுவார்கள். மேலும் ஜமாஅத் தொழுகையின் முக்கியத்துவத்தை மிகவும் வலியுறுத்துவார்கள். ஜமாஅத்தோடு தொழுகை நிறைவேற்றப்படாவிட்டால் அதைவிடப் பெரிய கவலை எனக்கு வேறெதுவும் இல்லை என்று அன்னார் பலமுறை கூறியுள்ளார்கள்.

மௌலவி ஸாஹிப் மேலும் கூறுகிறார்கள்: 'காதியானுக்கு வரும் மக்களின் எண்ணிக்கை குறைவாக இருந்த ஆரம்ப நாட்களில், 'நமது ஜமாஅத் உறுப்பினர்களுடன் இணைந்து ஐவேளைத் தொழுகைகளையும் ஜமாஅத்தாகத் தொழும் ஒரு காலம் வாய்க்காதா?' என்று அன்னார் பெரும் ஆவல் கொள்வார்கள். இதற்காக நான் துஆ செய்து வருகிறேன்; அல்லாஹ் எனது துஆவை அங்கீகரிப்பான் என்று நம்புகிறேன் என்று கூறுவார்கள்.'




இன்று அல்லாஹ்வின் அருளால் தொழுபவர்களின் எண்ணிக்கை எண்பது முதல் தொண்ணூறு வரை உயர்ந்துள்ளது என்பது இறைவனின் பேரருளாகும்' என்று மௌலவி ஸாஹிப் இந்த நிகழ்வை எழுதிய போது எழுதியிருக்கிறார்கள்.

இப்போதோ அல்லாஹ்வின் அருளால் ஒவ்வொரு நாட்டிலும் நமது பள்ளிவாசல்களும் உள்ளன. எனவே நாம் நமது பள்ளிவாசல்களை ஐந்து வேளைகளிலும் ஜமாஅத் தொழுகை மூலம் உயிர்ப்புடன் வைத்திருக்க முயற்சி செய்ய வேண்டும்.

மௌலவி ஸாஹிப் எழுதுகிறார்கள்: 'தொழுகையை முடித்தவுடன் அன்னார் (அலை) உடனடியாக வீட்டிற்குச் சென்று எழுத்துப் பணிகளில் மூழ்கிவிடுவார்கள். பின்னர் மக்ரிப் தொழுகைக்குப் பிறகு பள்ளிவாசலிலேயே அமர்ந்திருப்பார்கள்; நண்பர்களுடன் இணைந்து அங்கேயே உணவருந்துவார்கள். இஷா தொழுகையை முடித்த பிறகே வீட்டிற்குள் செல்வார்கள்.'

ஹஸ்ரத் அப்துஸ் ஸத்தார் ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தமது வாதத்திற்கு முன்னரே, மஸ்ஜித் முபாரக் சிறியதாக இருந்தபோது ளுஹர், அஸர், மக்ரிப் மற்றும் இஷா ஆகிய தொழுகைகளைத் தாமே தொழ வைப்பார்கள். மியான் குலாப், அப்துஸ் ஸத்தார் மற்றும் மியான் ஜான் முஹம்மது ஆகிய நாங்கள் மூவர் மட்டுமே அன்னாரைப் பின்பற்றித் தொழுபவர்களாக இருந்தோம். ஹஸ்ரத் ஸாஹிப் அவர்கள் தொழுத அந்த முறையை நான் அறிவேன். ஒவ்வொரு தொழுகையையும் அதன் நேரத்தில் தொழுவார்கள்; மிகுந்த பணிவுடனும் அழுது மன்றாடியும் நிறைவேற்றுவார்கள். ஒரு குழந்தை தனது பெற்றோரிடம் அழுது ஏதேனும் கேட்பது போல அன்னாருடைய தொழுகை இருக்கும். அத்தகைய தொழுகை பின்னால் நின்று தொழுது கொண்டிருக்கும் எங்களது உள்ளங்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இதுவே நாங்கள் கற்ற முதல் பாடமாகும். ஹஸ்ரத் ஸாஹிப் அவர்கள் தொழுகையை முடித்துவிட்டு அமரும்போது அன்னாருடைய பிரகாசமான முகத்தை நாங்கள் பார்ப்போம்; அது எங்களது இதயங்களைக் கவர்வதாக இருக்கும்.'

பீர் ஸிராஜுல் ஹக் சாஹிப் நுஃமானி அவர்கள் எடுத்துரைக்கிறார்கள்:

ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் நடத்தும் ஜனாஸா தொழுகை ஸுப்ஹானல்லாஹ்! ஸுப்ஹானல்லாஹ்! எவ்வளவு சிறப்பாகவும், சுன்னத்திற்கு இணக்கமாகவும் இருக்கும்! நூற்றுக்கணக்கான முறை ஹஸ்ரத் ஸாஹிப் அவர்களுக்குப் பின்னால் நின்று ஜனாஸா ஃகாயிப் மற்றும் ஜனாஸா ஹாழிர் தொழுகை தொழும் நற்பேறு இந்த எளியவனுக்குக் கிடைத்துள்ளது.

ஒருமுறை மியா(ன்) ஜான் முஹம்மது ஸாஹிப் காதியானி மர்ஹூம் காலமான போது, ஹஸ்ரத் ஸாஹிப் அவர்கள் ஜனாஸாவுடன் சென்றார்கள். அந்த மர்ஹூம் அன்னாரை பின்பற்றுபவராகவும், நேசராகவும், அர்ப்பணித்தவர்களில் ஒருவராகவும் இருந்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களும் அவர் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் ஸாஹிப் அவர்கள் எவ்வளவு வேலைப்பளுவுடன் இருந்தாலும், அவர் வந்தால் அத்தனையையும் விட்டுவிட்டு அவரைச் சந்திப்பார்கள்.

அவரது ஜனாஸா கபர்ஸ்தானுக்கு கொண்டு செல்லப்பட்ட போது, ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களே இமாமாக நின்று தொழுகை நடத்தினார்கள். அந்தத் தொழுகை எவ்வளவு நீண்ட நேரம் நடைபெற்றது என்றால், பின்னால் நின்றிருந்த எங்களது பாதங்கள் வலிக்கத் தொடங்கின; கைகளைக் கட்டி நின்றதில் கைகளில் வலியும் ஏற்பட்டது. மற்றவர்களின் நிலை எப்படியிருந்தது என்று எனக்குத் தெரியாது; ஆனால் நின்று, நின்று எனது நிலை மோசமடைந்தது. இதற்கு முன்பு எனக்கு இத்தகைய அனுபவம் ஏற்பட்டதில்லை. ஏனெனில் இரண்டு நிமிடங்களில் ஜனாஸாத் தொழுகை முடிந்துவிடுவதையே நாங்கள் பார்த்திருக்கிறோம். பின்னர் எனக்கு உணர்வு வந்தபோதுதான் புரிந்தது; தொழுகை என்றால் இதுதான் உண்மையான தொழுகை என்று! அதாவது, பிறகு இறைவணக்கத்தின் உண்மையான புரிதல் கிடைத்தது. அதன் பிறகு இபாதத்தில் எனக்கு இன்பமும் மகிழ்ச்சியும் நிரந்தரமாக கிடைக்கத் தொடங்கியது; இன்னும் நீண்ட நேரம் இந்தத் தொழுகை நீடிக்காதா என்று எண்ணத் தோன்றியது. இவ்வாறு ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் தமது தோழர்களுக்கும் தொழுகையின் இன்பத்தை ஊட்டி, அவர்களும் அதனை ஒப்புக்கொள்ளும் நிலையை ஏற்படுத்தினார்கள்.

பீர் ஸிராஜுல் ஹக் ஸாஹிப் நுஃமானி அவர்கள் (ரலி) மேலும் கூறுகிறார்கள்:

ஜனாஸா தொழுகை முடிந்த பிறகு ஹஸ்ரத் ஸாஹிப் அவர்கள் வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒருவர், ஹுஸூர்! தொழுகை இவ்வளவு நீண்ட நேரம் நடைபெற்றதில் நாங்கள் களைப்படைந்து விட்டோம்; தங்கள் நிலை எப்படி இருந்திருக்கும்? அதாவது தாங்களும் களைப்படைந்திருப்பீர்களே என்று கேட்டார். அதற்கு ஹஸ்ரத் ஸாஹிப் அவர்கள், களைப்படைவதற்கும் நமக்கும் என்ன தொடர்பு? நாம் அல்லாஹ்விடம் துஆ செய்து கொண்டிருந்தோம்; அந்த மர்ஹூமிற்காக அந்த இறைவனிடம் மன்னிப்புக் கோரிக் கொண்டிருந்தோம். இறைவனிடம் கேட்பவன் எப்போதாவது களைப்படைவானா? கேட்பதில் களைப்படைபவன் பாக்கியத்தை இழந்து விடுகிறான். நாம்

கேட்பவர்கள்; அவன் கொடுப்பவன்; பிறகு களைப்பு எதற்கு? யாரிடமாவது சிறு உதவி கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டாலே போதும், யாசிப்பவர் விடாமல் அங்கேயே நின்று விடுவார். அவ்வாறிருக்க, அனைத்து எதிர்பார்ப்புகளின் மையமாகிய அந்த ஏக இறைவனின் சன்னிதானத்தில் அவன் கொடை வள்ளலாகவும், அளவற்ற அருளாளனாகவும், நிகரற்ற அன்புடையவனாகவும் இருக்கும்போது களைப்படைதலுக்கான கேள்விக்கே இடமில்லை என்று பதிலளித்தார்கள். (தஸ்கிரத்துல் மஹ்தி, நூலாசிரியர் ஹஸ்ரத் பீர் ஸிராஜுல் ஹக் நுஃமானீ (ரலி) அவர்கள், பக்கம் 75 - 78)

அல்லாஹ் நமக்கும் இத்தகைய சிந்தனையுடன் தொழுகைகளை நிறைவேற்ற நல்வாய்ப்பு வழங்கட்டும்! அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கட்டளைப்படி தொழுகைகளை நிறைவேற்றுவோம்; அல்லாஹ்வின் அருட்கொடைகளை நினைவுகூர்ந்து, அவனைப் புகழ்ந்தவாறு தொழுகைகளை நிறைவேற்றுவோம் என்ற வாக்குறுதியின் அடிப்படையிலேயே நாமோ ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களிடம் பைஅத் செய்துள்ளோம். அல்லாஹ் நமக்கு இந்த வாக்குறுதியை நிறைவேற்ற நல்வாய்ப்பு வழங்குவானாக!

தொழுகைக்குப் பிறகு நான் இரண்டு ஜனாஸா ஃகாயிப் தொழுகைகளை தொழ வைப்பேன்.

முதலாவது, நாரோவால் டேரியா(ன்)வாலாவைச் சேர்ந்த மஹ்மூத் அஹ்மத் பட் ஸாஹிப்பின் மனைவி மதிப்பிற்குரிய அமதுஷ் ஷரீஃப் சாஹிபா அவர்களாவார். இவர் கடந்த சில நாட்களுக்கு முன்பு 84 வயதில் காலமானார்.

انا للہ وانا الیہ راجعون

அல்லாஹ்வின் அருளால் இவர் வஸிய்யத் செய்தவர் ஆவார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஸஹாபி குஜராத் மாவட்டத்தின் ஷாதிவால் பகுதியைச் சேர்ந்த ஹஸ்ரத் மௌலவி உமர் தீன் சாஹிப் (ரலி) அவர்களின் மகளாவார். இவர்கள் 1903 ஆம் ஆண்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஜீலம் நகருக்குப் பயணம் செய்தபோது, ஒரு கனவின் அடிப்படையில் அன்னாருடைய அருளுக்குரிய கைகளில் பைஅத் செய்யும் நல்வாய்ப்பை பெற்றிருந்தார்கள். மர்ஹூமா அவர்களுக்கு கணவரும், ஆறு மகன்களும், ஐந்து மகள்களும் மற்றும் பேரன் பேத்திகளும் உள்ளனர். இவருடைய ஒரு மகன் ஆசிஃப் மஹ்மூத் பட் ஸாஹிப் அவர்கள் தாருஸ்ஸலாம் தன்ஸானியாவில் ஜமாஅத்தின் முரப்பியாக பணியாற்றி வருகிறார். அவர் செயல் களத்தில் இருப்பதால் தனது தாயாரின் ஜனாஸா மற்றும் நல்லடக்கத்தில் கலந்து கொள்ள முடியவில்லை. மர்ஹூமாவின் ஒரு பேரன் உஸாமா பட் என்பவர் இங்கு முரப்பியாக உள்ளார். மர்ஹூமாவின் ஒரு மருமகனும் முரப்பியாக உள்ளார். வாழ்வை அர்ப்பணித்த ஒரு குடும்பமாகும்.

தன்ஸானியாவில் இருக்கும் மகன் ஆசிஃப் மஹ்மூத் பட் ஸாஹிப் எழுதுகையில்: 'எனது தாயார் எண்ணற்ற நற்பண்புகளைக் கொண்டவர். அதில் மிக முக்கியமானது இறைவனுடன் அவர் கொண்டிருந்த தொடர்பு ஆகும். அவர் உண்மையான கனவுகள் கண்டு வந்தார்; அவை மிகத் தெளிவாக நிறைவேறும். அவருக்குத் திருக்குர்ஆன் மீது அளப்பற்ற நேசம் இருந்தது. இது அவருக்குத் தனது தந்தையிடமிருந்து கிடைத்த சொத்தாகும். ஒவ்வொரு நாளும் ஸுப்ஹு தொழுகைக்குப் பிறகு, அந்தப் பகுதியிலுள்ள அஹ்மதி மற்றும் அஹ்மதி அல்லாத சிறுவர் சிறுமியருக்குக் திருக்குர்ஆன் ஓதக் கற்றுக் கொடுப்பார். திருக்குர்ஆன் ஓதுவதும், கேட்பதும் அவருக்கு மிகவும் பிடிக்கும். அவரிடம் நான் ஓதிக் காட்டும்போது சில சமயம் நான் வேண்டுமென்றே நிறுத்தி, அவர்களுக்கு அது நினைவிருக்கிறதா என்று பார்ப்பேன்; ஆனால் வயதான காலத்திலும் அவர்கள் உடனே அடுத்த வார்த்தையைச் சொல்லிவிடுவார். அவர்களுக்கு திருக்குர்ஆன் ஏறத்தாழ மனப்பாடமாக தெரிந்திருந்தது. 'வயதான காரணத்தால் நான் அனைத்தையும் மறந்துவிட்டேன், ஆனால் அல்லாஹ்வின் அருளால் திருக்குர்ஆன் மட்டும் நினைவிருக்கிறது' என்று கூறுவார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் நூல்களை வாசிப்பதில் அவர்கள் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார்கள். எப்போதும் ஏதேனும் ஒரு நூலை வாசித்துக் கொண்டே இருப்பார்கள். அவ்வாறே 'துர்ரே ஸமீன்', 'கலாமே மஹ்மூத்' மற்றும் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் கவிதைகள் மீது அதிக ஈடுபாடு கொண்டிருந்தார்கள். பெரும்பாலான நஸ்ம்கள் அவர்களுக்கு மனனமாக தெரிந்திருந்தது.

மர்ஹூமாவின் மருமகன் ஜமாஅத்தின் முரப்பியாகிய மஸ்வூத் ஸாஹிப் கூறுகிறார்: 'நான் காதியான் சென்றபோது, அங்குள்ள வீதிகளில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் நடந்துள்ளார்கள்; எனவே அங்கு அதிகமாக நடந்து செல்ல வேண்டும் என்று எனக்கு அறிவுரை வழங்கினார்கள். அல்லாஹ் அவர்களுக்கு பாவமன்னிப்பும் கருணையும் புரிவானாக! அவர்களின் துஆக்களை அவர்களின் சந்ததியினரின் விஷயத்தில் நிறைவேற்றுவானாக!

இரண்டாவது ஜனாஸா, லாகூரைச் சேர்ந்த மதிப்பிற்குரிய ஷேக் பஷீர் அஹ்மத் ஸாஹிப் அவர்களுடையதாகும். இவர் கடந்த சில நாட்களுக்கு முன்பு 97 வயதில் காலமானார்.

انا للہ وانا الیہ راجعون

அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்திருந்தார். இவருக்கு மூன்று மகன்களும், ஐந்து மகள்களும் உள்ளனர். இவர் ஸத்ர் அஞ்சுமன் அஹ்மதியாவில் முக்தாரே ஆம் எனும் பொறுப்பில் இருந்த மர்ஹூம் ஷேக் முஹம்மது தீன் ஸாஹிப்பின் இளைய மகனாவார். கிழக்கு ஆப்பிரிக்கா, யூ.கே மற்றும் அமெரிக்காவின் அமீர் மற்றும் மிஷனரி இன்சார்ஜாக இருந்த ஷேக் முபாரக் அஹ்மத் ஸாஹிப் மர்ஹூம் அவர்களின் தம்பியும், அரபு நாட்டில் முபல்லிக் ஆக இருந்த ஷேக் நூர் அஹ்மது ஸாஹிப் முனீர் அவர்களின் தம்பியும் ஆவார். மர்ஹூம் தஹஜ்ஜுத் தொழுபவராகவும், நோன்பு மற்றும் தொழுகைகளைப் பேணுபவராகவும், இன்முகத்துடன் பழகுபவராகவும், உயரிய நற்பண்புகள் கொண்டவராகவும் இருந்தார். லாகூர் ஜமாஅத்தின் கலப்பற்ற ஊழியராகத் திகழ்ந்தார். சவ்த்ரி அஸதுல்லாஹ் கான் ஸாஹிப் மற்றும் சவ்த்ரி ஹமீது நஸ்ருல்லாஹ் ஸாஹிப் ஆகியோரின் மாவட்ட செயற்குழுவின் சுறுசுறுப்பான உறுப்பினராக இருந்தார். 20 ஆண்டுகளுக்கும் மேலாகத் தனது பகுதியின் தலைவராகவும் இருந்தார். ஜமாஅத் பணிகளை மிகச் சிறப்பாகச் செய்தார். பள்ளிவாசல் கட்டுவதிலும் ஜமாஅத் சொத்துக்களை வாங்குவதிலும் முக்கியப் பங்காற்றினார். ஜமாஅத்தின் நிதித் திட்டங்களில் ஆர்வத்துடன் பங்கெடுத்ததோடு தனது பிள்ளைகளுக்கும் அதை அறிவுறுத்தினார்.

கிலாஃபத்தின் மீது மிகுந்த நன்றியுணர்வு கொண்டிருந்தார்; எப்போதும் இந்த தொடர்பை பேணி வந்தார். தனது பிள்ளைகளுக்கும்

**இதன் தொடர்ச்சி** 12-ம் பக்கம்.

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இறை நேசம் குறித்த மனம் கவர் கோணத்தில் நற்குறிப்புகள்**

இறை வணக்கம் இன்றி, இறைநேசம் இல்லை. இறைநேசம் இல்லாமல் உண்மையான இறை வணக்கம் சாத்தியமில்லை

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமக்கு இறைக் கட்டளைகளை வழங்கியபோது, அதன் உச்சத்தையும் தமது அமல்களால் செய்து காட்டினார்கள். பின்னர், இந்தத் தரத்தின் கீழ் உங்களை கொண்டு வருவதற்கு நீங்கள் முயலும்போதுதான் உண்மையான கட்டுப்படுதல் மற்றும் பின்பற்றுதல் என்பதோ முழுமை பெறும் என்று நமக்கு கவனமூட்டினார்கள். மேலும், நாம் அன்னாரின் முன்மாதிரி மற்றும் கட்டளைகளை எப்போதும் கருத்தில் கொண்டு அமல் செய்வதற்கு முயற்சி செய்யும்போதுதான் அன்னார் (ஸல்) தமது சமுதாயத்திற்காக செய்த அந்த துஆக்களும் நமக்கு பயன் தரும்

அல்லாஹ்வை வணங்குவதற்கான எந்தவொரு சந்தர்ப்பத்தையும் அன்னார் (ஸல்) கை நழுவ விட்டதில்லை

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 06 பிப்ரவரி 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 140**5** ஆண்டு **தப்லீஃக்** மாதம் **06 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

**சென்ற இதழின் தொடர்ச்சி....**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இறை வணக்க முறையை உம்முல் முஃமினீன் ஸவ்தா (ரலி) அவர்கள் இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள்: ஒருமுறை நான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பின்னால் நின்று தொழுதேன். மேலும் அன்னார் (ஸல்) ருகூஃ செய்தார்கள். எந்த அளவிற்கு என்றால் நான் எனது மூக்கைப் பிடித்துக் கொண்டேன். அதாவது எவ்வளவு நீண்ட நேரம் ருகூஃ செய்தார்கள் என்றால், என் மூக்கிலிருந்து இரத்தம் வந்துவிடுமோ என்று அஞ்சி நான் என் மூக்கைப் பிடித்துக்கொண்டேன்.

(அல்-இஸாபா ஃபீ தமீஸ் ஸஹாபா, கிதாப் அன்-நிஸா, ஸவ்தா பின்த் ஜம்ஆ, பாகம் 8, பக்கம் 196-197)

எவ்வாறிருப்பினும், இந்த நிலை, மனிதன் தனது நேசனைப் பிரிய மனமில்லாமல் எந்த போஸ்சர் (Posture)-ல் சென்றாலும், எந்த நிலையில் சென்றாலும் அதிலேயே மூழ்கிவிடுகின்ற அளவிலான நேசம் இருந்தால் மட்டுமே இந்த நிலை சாத்தியமாகும்.

இதே போன்று இறைத் தூதர் (ஸல்) அவர்களின் இறை வணக்கத்தின் தரம் குறித்து மற்றுமோர் அறிவிப்பில் முதர்ரஃப் அவர்கள் தமது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: நான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுது கொண்டிருப்பதைப் பார்த்தேன். அவர்கள் அழுது கொண்டிருந்த காரணத்தால், அவர்களின் மார்பிலிருந்து ஓர் ஆட்டுரல் சுழலும் சத்தம் வந்து கொண்டிருந்தது. (ஸுனன் அபூ தாவூத், கிதாப் அஸ்-ஸலாத், பாடம்: தொழுகையில் அழுவது, ஹதீஸ்: 904)

அதாவது எப்படி ஆட்டுரல் இயங்குகின்றதோ, கிரைண்டர் இயங்குகின்றதோ அதிலிருந்து வருகின்ற சப்தத்தைப் போன்ற சப்தம் வந்து கொண்டிருந்தது. மற்றோர் இடத்தில், உலையில் பானை கொதிக்கும் சத்தம் என்ற உதாரணம் வழங்கப்பட்டுள்ளது.

(ஸுனன் நஸாயி, கிதாப் அஸ்-ஸஹ்வ், பாடம்: தொழுகையில் அழுவது, ஹதீஸ்: 1214)

அடுத்து ஓர் அறிவிப்பில், வருகின்றது. ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஒரு வாகனத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பின்னால் அமர்ந்திருந்தேன். எனக்கும் அன்னாருக்கும் இடையில் ஒட்டகச் சேணத்தின் பின்பகுதி இருந்தது. அப்போது, முஆத் பின் ஜபலே! என்று அன்னார் (ஸல்) அழைத்தார்கள். அல்லாஹ்வின தூதர் (ஸல்) அவர்களே! இதோ இருக்கிறேன் இறைத்தூதரே!: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இது எனது பாக்கியம்' என்று நான் கூறினேன். அன்னார் (ஸல்), சிறிது தூரம் சென்ற பின் மீண்டும் 'முஆஸ் பின் ஜபலே!' என்று அழைத்தார்கள். நான் மீண்டும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இதோ இருக்கிறேன்!; இது எனது பாக்கியம்' என்று நான் கூறினேன். அன்னார் (ஸல்), சிறிது தூரம் சென்றார்கள். பின்னர் மீண்டும் 'முஆஸ் பின் ஜபலே!' என்று அன்னார் (ஸல்) அழைத்தார்கள். நான் மீண்டும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இதோ இருக்கிறேன்!; இது எனது பாக்கியம்' என்று நான் கூறினேன். அன்னார் (ஸல்) கூறினார்கள்: 'முஆஸே! இறைவனுக்கு அவனது அடியார்கள் மீதுள்ள உரிமை என்னவென்று உனக்குத் தெரியுமா?' என்று கேட்டார்கள். அதற்கு, அல்லாஹ்வும் அவனது தூதருமே நன்கு அறிவர் என்று நான் கூறினேன். அதற்கு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அடியார்கள் அவனை மட்டுமே வணங்க வேண்டும், அவனுக்கு எதையும் இணையாக்கக் கூடாது என்பதே அவனது உரிமையாகும். மீண்டும் சிறிது தூரம் சென்றார்கள். மேலும், முஆத் பின் ஜபலே! என்று கூறினார்கள். அப்போது, அல்லாஹ்வின தூதர் (ஸல்) அவர்களே! இதோ இருக்கிறேன்! ; இது எனது பாக்கியம் என்று நான் கூறினேன். அதற்கு, அன்னார் (ஸல்) கூறினார்கள்:

அல்லாஹ்வின் மீது அடியார்களுக்கு உள்ள உரிமை என்ன?

முதலிலே அல்லாஹ்வின் உரிமை பற்றி கூறப்பட்டது. தற்போது, அடியார்களின் உரிமை என்ன என்று கூறப்படுகிறது.

அதாவது அவர்கள் இறை வணக்கம் செய்யக் கூடிய அடியார்களாக இருக்க வேண்டும். அவ்வாறு செய்யும்போது அல்லாஹ்வின் மீது அவர்களின் உரிமை என்ன? என்ற விஷயம் கூறப்படுகிறது.

நான் கூறினேன் அல்லாஹ்வும், அவனது தூதருமே நன்கறிவர் என்று நான் கூறினேன். அப்போது, அன்னார் (ஸல்) கூறினார்கள்: அவன் அவர்களுக்கு தண்டனை வழங்குவதில்லை. அதாவது, அல்லாஹ் அடியார்களுக்கு தண்டனை வழங்குவதில்லை என்பதாகும். (ஸஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஈமான், ஹதீஸ்: 35)

எனவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இத்தகைய உயர்ந்த படித்தரத்தை நிலை நாட்டியது மட்டுமல்லாமல், நீங்களும் இவ்வாறு செய்தால் பின்னர் அல்லாஹ்வின் அன்பையும் பெறுவீர்கள் மேலும் அல்லாஹ்வின் தண்டனையிலிருந்தும் தப்பித்துக் கொள்வீர்கள் என்று அந்தத் தரங்களை பெறுவதற்கான அறிவுரையையும் வழங்கினார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் நபி (ஸல்) அவர்களைப் புகழ்ந்து ஓரிடத்தில் கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் திருக்குர்ஆனைப் பரப்புவதற்காக இறைவன் புறமிருந்து நியமிக்கப்பட்டார்கள். அதேபோன்று சுன்னத்தை நிலைநாட்டுவதற்காகவும் இறைவன் புறமிருந்து நியமிக்கப்பட்டார்கள். எனவே, திருக்குர்ஆன் எவ்வாறு உறுதியானதாக இருக்கின்றதோ

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2026-2028 Vol. 11 THU 26 MAR - 02 APR 2026 Issue No. 13 & 14

**ACT. MANAGER**
_ATHAR AHMAD SHAMIM
Mobile : +91 9815639670
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

அதேபோன்று, தொடர்ச்சியான சுன்னத்தும் உறுதியானதாக இருக்கின்றது. அதாவது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை சென்றடைகின்ற மற்றும் அன்னாரது செயல் மூலம் நிரூபிக்கப்பட்ட மற்றும் அறிவிப்பாளர்கள் தொடர்ச்சியாக எடுத்துரைத்து வந்துள்ள நடைமுறையாகும். அறிவிப்பின் ஒரு தொடர் சங்கிலியாக இருப்பதாகும்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இந்த இரண்டு சேவைகளையும் (திருக்குர்ஆன் மற்றும் சுன்னத்) தம் கைகளால் நிறைவேற்றி, இரண்டையும் தமது கடமையாகக் கருதினார்கள்.

தொழுகைக்கான கட்டளை வந்தபோது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வல்ல இறைவனின் அந்தக் கூற்றை தமது செயல் வடிவில் செயல்படுத்திக் காட்டினார்கள். ஃபஜ்ர் தொழுகைக்கு இத்தனை ரக்அத்துகள், மஹ்ரிப் தொழுகைக்கு இத்தனை மற்றும் பிற தொழுகைகளுக்கு இத்தனை இத்தனை ரக்அத்துகள் என்பதை செயல் வடிவில் வெளிப்படுத்தினார்கள். அவ்வாறே ஹஜ்ஜையும் செய்து காட்டினார்கள். பின்னர், ஆயிரக்கணக்கான ஸஹாபிகளை தமது கரங்களால் இந்தச் செயலைப் பின்பற்றச் செய்து தொடர் நடைமுறையை மிக வலுவுடன் நிறுவி விடடார்கள்.

சுயமாகச் செய்தும் காட்டினார்கள். பின்னர் அவர்களை அந்த விஷயத்தில் நிலைத்திருக்கவும் செய்தார்கள். ஆக, இந்தச் செயல்முறை இன்று வரை உம்மத்தில் நடைமுறை வடிவில் பிரபலமாகவும், உணரப்பட்டும் உள்ளது. இதன் பெயரே சுன்னத் ஆகும்.

அன்னார் (அலை) எழுதுகின்றார்கள்: ஆனால், ஹதீஸ்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்களுக்கு முன்னால் எழுதப்படவில்லை, மேலும் அதனை சேகரிப்பதற்கான எந்த ஏற்பாடும் அப்போது செய்யப்படவில்லை.

ஆக,எப்படியிருப்பினும், அன்னார் (அலை) சுன்னத் மற்றும் ஹதீஸிற்கு என்ன வேறுபாடு உள்ளது? என்பதை இவ்வாறு ஒப்பீடு செய்கின்றார்கள்.

அன்னார் (அலை) கூறினார்கள்: சுன்னத் முதன்மையானது ஆகும். மேலும் ஹதீஸின் அந்தஸ்து அதற்குப் பிறகுதான் வருகின்றது. மேலும், திருக்குர்ஆன் மற்றும் அன்னாரது சுன்னத்துடன் முரண்படாத அந்த ஹதீஸே சரியான ஹதீஸாகும்.

( ரிவியூ பர் முபாஹிஸா படால்வி வ சக்டால்வி, ரூஹானி கஸாயின் தொகுதி 19, பக்கம் 210-212)

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இறை வணக்கத்தின் உயர் தரம் என்னவாக இருந்தது? என்று எங்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் புகழ்ச்சியாக இதனை கூறுகின்றார்களோ அங்கு இதனையும் அன்னார் (அலை) கூறியுள்ளார்கள்:

அதாவது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அனைத்தையும் செய்து காட்டி, தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு அதைப் பின்பற்ற அறிவுறுத்தினார்கள். மேலும் அவர்களைச் செயல்படவும் வைத்தார்கள்.

எனவே, இன்று வரை நம்மை வந்தடைந்து கொண்டிருக்கின்ற இதுவோ அந்த சுன்னத் ஆகும்.

ஸஹாபிகளின் முன்மாதிரிகள் நம்மை வந்தடைந்திருக்கின்றன. அது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பயிற்சியின் காரணமாகவே வந்தடைந்திருக்கின்றன. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஸஹாபிகளுக்கு எவ்வளவு சிறந்த பயிற்சி அளித்தார்கள் என்றால், அவர்களின் இறை வணக்கங்களின் தரமும் உயர்ந்துகொண்டே சென்று விட்டது. மேலும், அல்லாஹ்வின் மீதான அவர்களின் அன்பின் தரமும் உயர்ந்து கொண்டே சென்றது. இதுவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நிலைநாட்டிய அந்த முன்மாதிரியாகும், அதனை அன்னாரது ஸஹாபிகள் மேற்கொண்டனர். நமக்கும் அதுவே கட்டளையாக உள்ளது. தஹஜ்ஜுத் தொழ வேண்டும் என்று தஹஜ்ஜுத் தொழுகை குறித்து அன்னார் (ஸல்) அவர்கள் மிகவும் வலியுறுத்தியுள்ளார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இதன் விளக்கமாக ஓரிடத்தில் எழுதுகின்றார்கள்.

**(இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்..)**

தமிழாக்கம்
முரப்பி
A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * *

10-ம் பக்கத் தொடர்ச்சி.....

உறவினர்களுக்கும் எப்போதும் அதையே போதித்தார். நானும் இவரைப் பார்த்திருக்கிறேன்; இவர் மிகவும் பணிவான மனிதர் ஆவார். அனைவரிடமும் மிகப்பணிவுடன் பழகுபவர்.

இவருடைய மகள் ஆசிஃபா ஸயீதுல்லாஹ் கூறுகிறார்: 'தந்தை அவர்கள் ஸுப்ஹு தொழுகைக்குப் பிறகு மிக அழகிய குரலில் திருக்குர்ஆன் ஓதுவார்கள்; அது எங்கள் அனைவரது தர்பிய்யத்திற்கும் அடிப்படையாக அமைந்தது. இவருடைய மற்றொரு மகள் இங்கு வசிக்கிறார். அவர் கூறுகிறார்:

எனக்கு ரப்வாவில் திருமணம் நிச்சயிக்கப்பட்ட போது, நீ தலைமையகமான ரப்வாவிற்குச் செல்வது உனது பெரும் நற்பேறு ஆகும். அங்கு உனது குழந்தைகளின் தர்பிய்யத்தை சிறப்பாகச் செய்வதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக என்று கூறினார்கள். அவர் ஒரு வியாபாரியாக இருந்தபோதிலும் உலக விஷயங்களைப் பேசாமல் பிள்ளைகளுக்கு மார்க்கத்தைப் போதித்தார். அல்லாஹ் அவர்களுக்கு பாவமன்னிப்பும் கருணையும் புரிவானாக! அவர்களின் துஆக்களை அவர்களின் சந்ததியினரின் விஷயத்தில் நிறைவேற்றுவானாக!

தமிழாக்கம்
முரப்பி
A.P.A . தாரிக் அஹ்மது

* * * * * * *

**National Watch Company**
**Sales & Service**



**B. Mohamed Adil**
93632 06679
99433 38000

196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad